வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 17.11.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 341 | பக்கங்கள் : 12

# நாட்டில் புதிய பல்கலைகளை ஆரம்பிக்க புலம்பெயர் தமிழர்கள் முன்வரவேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு



கொழும்பு, நவம்பர் 17

இந்நாட்டு பிள்ளைகளின் உயர் கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவிருப்பதாகவும், அதற்கு பங்களிப்பு வழங்கும் தனியார் துறையினருக்கு குறைவின்றி ஆதரவு வழங்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் மீது அக்கறை இருக்குமாயின் இந்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்திற்காக புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க புலம்பெயர் தமிழ், சிங்கள இலங்கையர் முன் வரவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். 11

## மாகாண சபைகளுக்குக் கீழ் பல்கலைகள் அமைந்தால் பெரும் விளைவுகள் ஏற்படும்!

### எச்சரிக்கிறார் சரத் வீரசேகர

கொழும்பு, நவ. 17

மாகாண சபைகளின் கீழ் பல்கலைக்கழகங்கள் கொண்டுவரப்பட்டால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்படும் என வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. 11

## வடக்கு மாகாணத்தில் 7,000 மாணவர்கள் உயர்கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்!

### பிரதம செயலர் சமன் பந்துலசேன தகவல்

யாழ்ப்பாணம், நவ. 17

வடக்கில் 7,000 மாணவர்கள் க. பொ.த உயர்தர பரீட்சையின் பின்னர் தமது உயர்கல்வியை தொடராது கல்வி நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளதாக வடமாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் வட மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் மனைப்பொருளியல் மற்றும் ஆடை வடிவமைப்பு கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழை வழங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் 11

## மாலைதீவு பயணமானார் ரணில்!

கொழும்பு, நவ. 17

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக தெரிவான இப்ராகிம் முஹமது ஷோலியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலைதீவு பயணமானார்.

மாலைதீவில் அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் மாலைதீவின் எதிர்க்கட்சி வேட்பாளர் இப்ராகிம் முஹமது ஷோலி வெற்றி பெற்றிருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் அரசியல் 11

## 74 பாடசாலை கட்டடங்கள் ஆபத்தான நிலைமையில்!

கொழும்பு, நவ. 17

நாடளாவிய ரீதியில் 74 பாடசாலை கட்டடங்கள் ஆபத்தான நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மற் றும் தங்காலை பெண்கள் கல்லூரி ஆகியவற்றின் பாழடைந்த கட்டடங்களும் அடையாளம் 11



## சீன விசேட தூதுவர் இலங்கை வருகிறார்

### அரச உயர்மட்ட உறுப்பினர்களுடனும் சந்திப்பு

கொழும்பு, நவ. 17

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் விசேட தூதுவரும், அரச சபை உறுப்பினருமான ஷென் யிகின் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் நாளை முதல் 21 வரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட 11

## யாழில் சுகாதார சீர்கேடு நிலவிய பேக்கரி, மூன்று உணவகங்கள் சீல்!

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்.மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் கே.கே.எஸ் வீதி மற்றும் இராமநாதன் வீதியில் உள்ள உணவகங்கள், பேக்கரி என்பன திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஏற்கனவே பல தடவைகள் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட நிலையிலும் 03 உணவகங்கள், பேக்கரி என்பன சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய நிலையில் பொது சுகாதாரப் பரிசோதகரிடம் சிக்கின.

இதனையடுத்து 03 உணவகங்கள் மற்றும் பேக்கரி என்பவற்றுக்கு எதிராக மேலதிக நீதவான் நீதிமன்றில் தனித்தனியே வழக்குகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தி.கிருபனால் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை விசாரித்த மேலதிக நீதவான் சுகாதார சீர்கேடுகள் திருத்தம் செய்யும் வரை 04 11



## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை ராஜபக்ஷ அரசே நாசப்படுத்தியது

### அம்பலப்படுத்தினார் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, நவ. 17

ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு விசாரணையை கடந்த அரசாங்கமே நாசப்படுத்தியது என ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் வெளிநாட்டவர்கள் உட்பட 269 பேர் கொல்லப்பட்ட அதே 11

## 100 மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை!

கொழும்பு, நவ. 17

அத்தியாவசிய 100 மருந்துகளுக்கு விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் விலை தொடர்பான அதிகார சபைக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஜயந்த சமரவீர எம்.பி எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜயந்த சமரவீர எம்பி தமது கேள்வியின் போது, அமெரிக்க டொலரின் அதிகரிப்போடு 11

## இப்படியும் நடக்கிறது

ஓர் ஏழையின் சிரிப்பைக் காண விரும்பிய கடவுள் அவன் முன்னே தோன்றி "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"பணம், செல்வம், தங்கம், வைரம்!" என்றான் ஏழை ஆசையோடு. கடவுள் வலது கையின் சுட்டு விரலை அங்கிருந்த அலுமாரியை நோக்கி நீட்டினார். அங்கிருந்த அலுமாரி தங்கமானது.

ஆனால் ஏழை சிரிக்காமல் பேசாமல் இருந்தான். கடவுள் மறுபடி விரலை நீட்ட, அங்கிருந்த மேசை தங்கமானது.

அவன் அப்போதும் சிரிக்காமல் பேசாமல் இருந்தான். கடவுள் வேக வேகமாக அந்த அறையில் உள்ள பொருட்களையெல்லாம் தங்கமாக்கினார். அப்போதும் ஏழை சிரிக்கவில்லை.

சோர்ந்து போன கடவுள் ஏழையிடம் கேட்டார்.

"இன்னும் உனக்கு என்ன வேண்டும்?" என்று.

"அந்த விரல் வேண்டும்" என்றான் ஏழை. கடவுள் மயங்கி விழாததுதான் குறை.

இந்தக் கதைக்கும் இனி எழுதப்போகின்ற விடயத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

முன்னர் ஒருதடவை சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய அதன் பேச்சாளர் ஒருவர், தேசியத் தலைவர் பிரபாகரனுக்குப் பிறகு இப்போது கஜேந்திரகுமார் தான் தேசியத் தலைவர் என்றார். அதுகுறித்து இந்தப் பத்தியிலும் முன்னர் ஒருதடவை எழுதியது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தங்களை விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியாக காட்டுவதில் எப்போதும் அக்கறை காட்டிவருவது ஒன்றும் இரகசியமானது அல்லத்தான். அதாவது ஆசைப்படுவதற்கு யாருக்கும் உரிமை இருக்கின்றதுதானே. தங்களை விடுதலைப் புலிகளின் தொடர்ச்சி என்று அவர்கள் காட்ட விரும்பினால் அது தவறில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் செய்ததுபோல தாங்களும் செய்தால் மாத்திரம் போதுமானது அல்ல. அவர்களைப் போல செயற்படவும் வேண்டும்.

ஒற்றையாட்சியை எந்தக் காரணத்திலும் தீர்வாக ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று சொன்ன புலிகள், அதனால்தான் தேர்தல் அரசியலில் ஒருபோதும் ஈடுபட்டதில்லை. அப்படி ஈடுபட்டால் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு சத்தியப்பிரமாணம் செய்யவேண்டியிருக்கும் என்பதாலேயே அவர்கள் அதனை செய்யவில்லை.

அவற்றையெல்லாம் எதற்காக இப்போது எழுதவேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

அண்மையில் முல்லைத்தீவில் மரணமடைந்த அரசியல் செயற்பாட்டாளர் விஜயகுமாருக்கு அவர்கள் 'தேசப்பற்றாளர்' விருது வழங்கி வெளியிட்ட அறிக்கையை படிக்கமுடிந்தது.

தமது கட்சியில் இணைந்து முல்லைத்தீவில் இயங்கிய கணபதிப்பிள்ளை விஜயகுமார் அவர்களின் தமிழ் தேசியக் கொள்கை சார்ந்த அர்ப்பணிப்பான செயல்பாடுகளுக்கு மதிப்பளித்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணி அவருக்கு 'தேசப்பற்றாளர்" என்ற உயரிய கௌரவத்தை வழங்கி மதிப்பளித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள் மௌனிக்கப்படுவதற்கு முன்னர் தமிழ் இனத்திற்கு அரும்பணியாற்றிய பெரியவர்களுக்கு 'மாமனிதர்' விருதுகளை வழங்கினார்கள். இவ்வாறு விருது வழங்கப்பட்டவர்கள் தமிழ் இனத்திற்காக தமது வாழ்நாள் முழுவதும் பணியாற்றியவர்களாக இருந்தனர். அத்தகையவர்களுக்கே அந்த மிக உயரிய விருதை வழங்கினார்கள்.

அதற்கு மேலதிகமாக தம்மோடு ஏதாவது ஒரு வகையில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களுக்கு 'நாட்டுப்பற்றாளர்' விருதை வழங்கி கௌரவித்தார்கள். அவ்வவாறு கௌரவிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் மதிப்புக்குரியவர்களாக இருந்த அதே வேளையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏதேனும் ஒரு வகையில் பணியாற்றியவர்களாகவும் இருந்தனர்.

விடுதலைப் புலிகள் அவ்வாறானவர்களுக்கு 'நாட்டுப் பற்றாளர்' விருது வழங்கியதுபோல முன்னணியினர் தமது கட்சியுடன் பணியாற்றியவர்களுக்கு 'தேசப்பற்றாளர்' விருது கொடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

புலிகள் நாட்டுக்காக போராடினார்கள். முன்னணியினர் ஒரு நாடு இரு தேசம் கொள்கையுடன் தேசத்துக்காக போராடுவதால் 'தேசப்பற்றாளர்' விருது வழங்கியிருக்கிறார்கள்.

இனி விரைவில் அவர்களின் 'மாமனிதர்' விருதும் சிலருக்கு கிடைக்கலாம். இனி என்ன, இந்த விருதுகளுக்காகவே அவர்களது கட்சியில் பலர் இணைந்து கொள்ளலாம். அவர்களின் கொள்கையை ஏற்றுக்கொண்டு பயணிக்கத் தொடங்கலாம்.

ஆனால் புலிகள் செய்தது போல அவர்களும் செய்தால் மட்டும் அவர்கள் புலிகள் ஆகிவிடமுடியாது என்பதும் அவர்கள் அறியாததல்ல. இந்த அறிவிப்பை வெளியிட்ட அறிக்கையின் இறுதியில், 'தமிழ் தேசிய மக்கள் முன்னணி. தலைமைச் செயலகம்' என்று எழுதப்பட்டிருந்தது. புலம்பெயர் மண்ணிலிருந்து செயல்படும் புலிகளின் ஒரு குழுவினரின் அறிக்கையை அது ஞாபகப் படுத்தியது.!

**-ஊர்க்குருவி.**

# உயர்நீதிமன்ற தீர்ப்பையடுத்து 2 வாரத்திற்கு ஊடக சந்திப்புகளை இரத்து செய்த மொட்டு!

கொழும்பு, நவ. 17

பொதுஜன பெரமுனவின் தினசரி ஊடகவியலாளர் மாநாட்டை இரண்டு வாரங்களுக்கு நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைக்கு ராஜபக்ஷர்கள் உள்ளிட்ட அதிகார வர்க்கக் குழுவே காரணம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து, அக்கட்சி பெரும் சிக்கலில் உள்ளது.

இதனால் ஊடகங்களின் கேள்விகளுக்கு முகங் கொடுக்க முடியாத நிலை கட்சிக்கு ஏற்பட்டுள்ளதால் மேற்படி தீர்மானத்தை அக்கட்சி எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

நிலைமை ஓரளவுக்கு அமை தியடையும் வரை கட்சித் தலைமையகத்தில் நடைபெறும் தின சரி ஊடகவியலாளர் சந்திப்பை இரண்டு வார காலத்திற்கு தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ)

# 19 இலட்சம் ரூபா பெறுமதியான நகை திருடியவர் திஸ்ஸமகராமவில் கைது!

கொழும்பு, நவ. 17

திஸ்ஸமகராம பிரதேசத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி 19 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்க நகைகளை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் திஸ்ஸமகராம பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவராவார்.

இவர் ஹலம்பகஸ்வல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் திஸ்ஸமகராம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து சில தங்க நகைகளை பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திஸ்ஸமகராம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பட்ஜெட்டுக்கு பெரமுன முழுமையான ஆதரவு!

## கண்டியில் கூறினார் மகிந்த



கொழும்பு, நவ. 17

2024ஆம் நிதிண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்கு பொதுஜன பெரமுன தமது முழுமையான ஆதரவை வழங்கும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் தொடர்புடைய அரசியல் கட்சி என்பதை வலியுறுத்திய மகிந்த ராஜபக்ஷ, வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதை தடுக்கும் வகையில் பொதுஜன பெரமுன செயல்படாது என்றும் சுட்டிக் காட்டினார்.

கண்டி தலதா மாளிகையில் நேற்று முன்தினம் இரவு வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(அ)

# மாணவி ஒருவரை கடத்த உதவிய பெண் உட்பட இரண்டு பேர் கைது!

கொழும்பு, நவ. 17

பாடசாலை நிறைவடைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி ஒருவரை கடத்திச் செல்வதற்கு உதவி புரிந்த பெண் ஒருவர் உட்பட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் களுத்துறை - கிதுலாவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது

குறித்த மாணவியை கடத்திச் சென்ற சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான பாடசாலை மாணவர் ஒருவர் தற்போது அந்த பகுதியில் இருந்து தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த குறித்த மாணவி களுத்துறை - ஹீனடியன்கல பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கடத்திச் செல்லப்பட்டார்.

(அ)

# புத்தளம் பிரதேசத்தில் அதிகரிக்கும் டெங்கு!

## குழந்தை ஒன்றும் மரணம்

கொழும்பு, நவ. 17

புத்தளம் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளதுடன், நகரில் டெங்கு நோய் காரணமாக இன்று குழந்தை ஒன்று மரணித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அதன்படி, தற்போதைய சீரற்ற காலநிலையினால் நாடளாவிய ரீதியில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில், புத்தளம் நகரசபை செயலாளர் பிரீத்திகாவின் ஆலோசனைக்கமைய நகர சபை டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

எனவே, டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அடையாளங் கண்டு அவற்றை அழிப்பதுடன் உங்களது சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்து உயிராபத்துக்களைத் தவிர்க்குமாறு நகரசபை நிர்வாகம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், டெங்கு பரவும் அபாயகரமான சூழலை வைத்திருப்போருக்கெதிராக நகரசபையினால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ள தாகவும் நகரசபை நிர்வாகம் அறிவித்துள்ளது.

(அ)

ஈழநாடு
Eelanadu
17.12.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தலதாமாளிகாவ தந்திரோபாயம்

நாட்டில் ஏற்பட்ட மோசமான பொருளாதார பின்னடைவுக்கு ராஜபக்ஷக்களே பொறுப்புக் கூறவேண்டுமென்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பது தொடர்பில் - நேற்றைய தலையங்கத்தில் பார்த்தோம். இந்தத் தீர்ப்பை தொடர்ந்து, மகிந்த ராஜபக்ஷ உடனடியாகவே, கண்டி தலதாமாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருக்கின்றார். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை, தான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை - என்று, வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களிடம் தெரிவித்திருக்கின்றார். சிங்கள தேசியவாதத்தின் காவலர்களாக தங்களை காண்பித்துக் கொள்பவர்கள் அனைவருமே, அவர்கள், அரசியல் ரீதியில் நெருக்கடிகளை சந்திக்கும் போதெல்லாம், உடனடியாகவே தஞ்சமடைவது, பௌத்த தலங்களில் தான். அங்கிருந்துதான் அரசியல் அறிக்கைகளை வெளியிடுவதுண்டு.

யுத்த வெற்றியை தொடர்ந்து, ராஜபக்ஷக்கள், தங்களை வெல்ல முடியாதவர்களாக காண்பிப்பதில் மட்டுமே கவனம் செலுத்தினர். சகோதரர்கள், பின்னர் தங்களுடைய பிள்ளைகள் - என இலங்கைத் தீவை தொடர்ந்தும், ராஜபக்ஷக்களின் குடும்ப அதிகாரத்திற்குள் கட்டுப்படுத்தி வைப்பதே அவர்களது இலக்காக இருந்தது. இந்த இலக்கை அடைவதற்கு இரண்டு துருப்புச் சீட்டுக்களை பயன்படுத்தினர். ஒன்று விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிரான யுத்த வெற்றிவாதம் - அடுத்தது, பௌத்தத்தின் ஏகபோக காவலர்களாக தங்களை நிறுவுவது. இந்த அடிப்படையில்தான், கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிப் பிரமாணத்தை அநுராதபுரத்திலுள்ள ருவன் வெலிசாயவில் மேற்கொண்டார். சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது, தன்னை ஒரு சிங்கள பௌத்த தலைவனாக பிரகடனம் செய்தார்.

மேற்படி இரண்டு துருப்புச் சீட்டுக்களுமே சாதாரண சிங்கள மக்களை எக்காலத்திற்கும் சிறைப்படுத்தி வைப்பதற்கு பயன்படுமென்றே ராஜபக்ஷக்கள் எண்ணினர். அந்த அடிப்படையிலேயே தங்களின் அரசியல் வியூகங்களை வகுத்துக் கொண்டனர். ஆரம்பத்தில் அவர்களது வியூகம் அவர்கள் எதிர்பார்த்தது போன்றே அவர்களுக்கு தொடர் வெற்றியை கொடுத்தது. பொருளாதார நெருக்கடி உச்சமடைந்ததை தொடர்ந்தே, ராஜபக்ஷக்களின் தென்னிலங்கை செல்வாக்கு சரிந்தது.

இந்த நிலையில் தங்களுடைய செல்வாக்கை மீளவும் தூக்கி நிறுத்துவதன் ஊடாக மட்டுமே, தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை தோற்கடிக்க முடியுமென்று கருதுகின்றனர். இந்த பின்புலத்தில்தான், தலதாமாளிகாவ வழிபாடுகளிலிருந்து, மீளவும் தங்களுடைய பயணத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளும் வியூகமொன்றை ராஜபக்ஷக்கள் வகுக்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புத்த பெருமானின் பொருளாதார தத்துவங்களை புறக்கணித்தமையின் காரணமாகவே - நாடு திவாலாகியதாக கூறுகின்றார். இந்தப் பின்புலத்தில்தான், தற்போது இந்த வங்குரோத்து நிலைக்கு ராஜபக்ஷக்களே காரணமென்று இலங்கையின் உயர் நீதிமன்றம் கூறியிருக்கின்றது.

ஒரு நாட்டில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மேல் எதுவுமில்லை. ஆனாலும் அதனை தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்று மகிந்த கூறுகின்றார். எவர் என்ன கூறினாலும் - சிங்கள - பௌத்த கட்டமைப்புக்கள் தங்களுடன் நின்றால், எதனையும் தங்களால் சமாளிக்க முடியுமென்றே ராஜபக்ஷக்கள் கருதுகின்றனர். அதனடிப்படையில் தங்களின் மீள் எழுச்சிக்கான புதிய பாதை ஒன்றை அமைக்க முயற்சிக்கின்றனர். அவர்களது மீள் எழுச்சி சாத்தியப்படுமானால், இலங்கையின் அரசியல் நிலைமைகள் பெரும் குழப்பகரமான சூழ்நிலையொன்றை எதிர்கொள்ளும்.

### வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**



“இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்”

**- அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர் - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)**

# எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள்!

## 28ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை

*யாழ்ப்பாணம், நவ. 17*

சந்தேக நபர்களாக நீண்ட காலம் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசி யல் கைதிகளும் கால தாமதமின்றி விடுவிக் கப்படவேண்டும்.



அத்துடன், 15 முதல் 28ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10 பேரையும், ஜனாதிபதி பொது மன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிர்ப்புடன் விடுவிக்கவேண்டுமென, ஒரு மனிதநேய அமைப்பாக நாம் வினயமுடன் வேண்டுகை செய்கின்றோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கடந்த 2006 ஓகஸ்ட் 14ஆம் திகதி, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டு, 16ஆண்டுகளாக விளக்க மறியலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளை, ‘நிரபராதிகள்’ எனத் தெரிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களை கடந்த 10ஆம் திகதி விடுதலை செய்துள்ளது.

அதாவது, குறித்த வழக்கில், மாத்தளையை சேர்ந்த குடும்பஸ்தரான சுப்பிரமணியம் சுரேந்திரராஜா சார்பில், சட்டத்தரணிகள் தணுக்க நந்தஸ்ரீ, எஸ்.அனுஷாங்கன் மன்றில் முன்னிலையாகி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அடிப்படையில் துன்புறுத்திப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தனது வாதாட்டத்தின் மூலம் வலுவிழக்கச் செய்திருந்தார்.

அதேவேளை, முல்லைத்தீவைச் சேர்ந்த கனகரத்தினம் ஆதித்தனுக்கு ஆதரவாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் சார்பில், முன்னாள் நீதிபதியான சிரேஷ்ட சட்டத்தரணி கனகா சிவபாதசுந்தரமும் முன்னின்று வழக்கினை திறம்பட நெறிப்படுத்தியுள்ளனர்.

ஒரு சந்தேகநபரை ‘நிரபராதி’ என நிரூபிப்பதற்கு எமது நாட்டில் 15ஆண்டுகள் எடுத்துள்ளதென்பது உண்மையில் கவலை தரும் விடயமே. இருப்பினும், மிக நீண்ட காலங்களாக துன்பங்களை மாத்திரமே அனுபவித்துவந்த இவர்கள் விடுதலை பெற்று அவர் தம் குடும்பங்களுடன் இணைந்துள்ளமை பெருமகிழ்ச்சியை தருகிறது.

இவர்கள் விடுதலையாகி வருகின்ற போது, அங்கு சிறையில் மீதமிருக்கும் எமது உறவுகள்,

“எங்களையும் உயிருடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!” எனக்கூறி விழி கலங்க வழியனுப்பி வைத்துள்ளனர்.


ஆகவே, இதேபோன்று, மேலும் சந்தேக நபர்களாக நீண்ட காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசியல் கைதிக ளும் காலதாமதமின்றி விடுவிக்கப்படவேண்டும்.

அத்துடன், 15 முதல் 28ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10பேரையும், ஜனாதிபதி பொது மன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிர்ப்புடன் விடுவிக்க வேண்டுமென, ஒரு மனிதநேய அமைப்பாக நாம் வினயமுடன் வேண்டுகை செய்கின்றோம்.

எவ்வாறாயினும், கடந்த பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகளின் பொது நன்மைக்கென்று குரலுயர்த்தி வருகின்ற ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பானது, மீதமுள்ள 14தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை வாழ்வு மெய்ப்படும் வரையில், நடைமுறைக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் தளர்வுறாது செயற்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்-என்றுள்ளது.

*(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன்-மனைக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். சக ஊழியர்களுடன் மோதல்கள் விலகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நன்மைகள் உண்டாகும்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் அடிப்படை வசதியை மேம்படுத்துவீர்கள். உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை தெரிந்து கொள்வீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
பழைய இனிய சம்பவங்களை நினைத்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும்.

**துலாம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் விரயம் வரும். உத்தியோகத்தில் கூடுதல் செலுத்துவது நல்லது. விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளுடன் மோதல்கள் வந்து நீங்கும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**மீனம்**
எதையும் தாங்கும் மன பலம் கிடைக்கும். குடும்பத்தில் உள்ள பிரச்னை தீரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

# தமிழகத்தில் 5 நாட்களுக்கு பரவலாக மழை

சென்னை, நவ. 17

தமிழகத்தில் 5 நாட்களுக்கு பரவலாக மழையும், ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில்-

நேற்று முன் தினம் மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்றுக் காலை 5.30 மணியளவில் மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஆழந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, காலை 8.30 மணி அளவில் விசாகப்பட்டினத்தில் இருந்து சுமார் 390 கி.மீ கிழக்கு தென்கிழக்கே, பரதீப்பிலிருந்து (ஒடிசா) சுமார் 320 கி.மீ தெற்கு தென்கிழக்கே, டிகாவிலிருந்து (மே.வங்கம்) சுமார் 460 கி.மீ தெற்கு தென்மேற்கே, கேப்புபாராவிலிருந்து (வங்கதேசம்) சுமார் 610 கி.மீ தெற்கு தென்மேற்கே நிலை கொண்டுள்ளது. இது வடக்கு வடகிழக்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப்பெற்று, 18ஆம் திகதி அதிகாலை வங்கதேச கடற்கரையை மோங்லா-கேப்புபாராவுக்கு இடையே கடக்கக்கூடும்.

இதன் காரணமாக நேற்று முதல் 21 ஆம் திகதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (அ)

# நிலுவையில் உள்ள சட்ட மசோதாக்களை அரசுக்கே திருப்பி அனுப்பிய ஆளுநர் ரவி

சென்னை, நவ. 17

பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை மாநில அரசே நியமனம் செய்வது உள்ளிட்ட நீண்டகாலமாக நிலுவையில் இருந்துவரும் 10 சட்ட மசோதாக்களுக்கு அரசிடம் விளக்கம் கேட்டு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அரசுக்கு திருப்பி அனுப்பியுள்ளார்.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் சமீபத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதில், "தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் மற்றும் அரசாணைகள், அரசின் கொள்கை முடிவுகளுக்கு ஆளுநர் ரவி ஒப்புதல் வழங்காமல் நீண்ட காலமாக கிடப்பில் போட்டிருக்கிறார். ஆளுநரின் இந்த செயல் அரசியல் சாசனத்துக்கு எதிரானது. சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கும், தமிழக அரசாணைகளுக்கும் ஆளுநர் விரைவில் ஒப்புதல் வழங்க உத்தரவிட வேண்டும். ஆளுநர் தரப்பில் ஒப்புதல் வழங்க கால வரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும்" என்று கோரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், "சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பப்பட்ட மசோதாக்கள் மற்றும் அரசாணைகள், கோப்புகள் நீண்ட காலமாக கிடப்பில் போடப்பட்டிருப்பது கவலைக்குரியது" என்று கருத்து தெரிவித்திருந்தது.

இந்தநிலையில், தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பிய 10 சட்ட மசோதாக்களை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசுக்கு திருப்பி அனுப்பியிருக்கிறார். இந்த மசோதாக்கள் குறித்து தமிழக அரசு விளக்கம் அளிக்குமாறு ஆளுநர் கூறியிருக்கிறார்.

(அ)

# அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு உடல்நல பாதிப்பு

சென்னை, நவ. 17

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி உடல்நலக் குறைவு காரணமாக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு உடல்நலக் குறைவு ஏற்படும் சமயங்களில், மருத்துவமனைக்கு அழைத்து சிகிச்சையளிப்பது வழக்கம். ஏற்கெனவே ஒருமுறை உடல்நலக்குறைவு காரணமாக, அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கழுத்துப் பகுதியில் வலி மற்றும் உடல் வலி காரணமாக, அமைச்சர் செந்தில் பாலாஜி நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். முன்னதாக, புழல் சிறையில் இருந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் செந்தில் பாலாஜி மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரால் எழுந்த நடக்கமுடியாத காரணத்தால், சக்கர நாற்காலியில் அமர வைத்து பொலிஸார் அவரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர்.

(அ)

# அண்ணாமலை பல்கலை 58 பேராசிரியர்கள் பணி நீக்கம்!

சிதம்பரம், நவ. 17

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்த 58 பேராசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மேலாண்மை துறை மற்றும் வேளாண்மை துறையில் பணியாற்றும் 58 பேராசிரியர்கள் அரசு தகுதி விதிமுறைபடி பணியில் சேராமல், பணியாற்றி வந்ததாக கூறி, தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறை பரிந்துரையின் பேரில் அவர்களை பணி நீக்கம் செய்து பதிவாளர் ஆர். சிங்காரவேலு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(அ)

# பெங்களூர் புறப்பட தயாரான விமானத்தில் கோளாறு!

திருச்சி, நவ. 17

திருச்சியில் இருந்து பெங்களூர் புறப்பட தயாரான விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதையடுத்து, பயணிகள் மாற்று விமானத்தில் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

திருச்சி விமான நிலையத்திலிருந்து 70 பயணிகளுடன் நேற்று காலை 8.05 மணிக்கு இண்டிகோ விமானம் பெங்களூர் புறப்பட தயாராக இருந்தது. அப்போது விமானத்தில் திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது.

எனவே, தொழில்நுட்ப கோளாறு சரி செய்யப்பட்ட பிறகு விமானம் புறப்படும் என விமான நிறுவனம் அறிவித்தது.

இதனையடுத்து, பயணிகளை விமானத்திலேயே அமர வைத்த நிலையில் கோளாறை சரிசெய்யும் முயற்சியில் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஈடுபட்டனர். நீண்ட நேரமாகியும் கோளாறு சரி செய்யப்படவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த பயணிகள் அனைவரும் விமானத்திலேயே போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். இதனையடுத்து விமான நிறுவனம் மாற்று விமானத்தை ஏற்பாடு செய்தது.

# வங்கக் கடலில் உருவாகும் மிதிலி புயல்?

சென்னை, நவ. 17

வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதால் புயலின் பெயர் வெளியிடப்பட்டுள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமானது புயலாக வலுப்பெறும் பட்சத்தில், மாலைதீவு நாடு பரிந்துரைத்த 'மிதிலி' என்ற பெயர் சூட்டப்படவுள்ளது.

இதற்கு முன்னதாக உருவான புயல்களுக்கு ஈரான் பரிந்துரைத்த ஹமூன், இந்தியா பரிந்துரைத்த தேஜஸ் ஆகிய பெயர்கள் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ)

# தரமற்ற எரிபொருளே சந்தைக்கு விநியோகம்

**எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு**

கொழும்பு, நவ. 17

**“பல ஆய்வக அறிக்கைகள் மூலம் தரக்குறைவான எரி பொருள் என உறுதிப்படுத்தப்பட்ட எரிபொருள் கையிருப்பு குறித்து நான் அண்மையில் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியபோதும் குறித்த எரிபொருள் ஏலவே சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் என்ன சொன்னாலும் அது நடந்துள்ளதால் இது தொடர்பில் சரியான தகவல்களை முன்வைக்கவும்.”**

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இந்த தரக்குறைவான எரிபொருள் நல்ல எரிபொருளுடன் கலந்து சந்தையில் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது என்றும்,இங்கு ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளதால் இதற்கு பொறுப்பான அமைச்சர் விளக்கமளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் இது குறித்து வெளிப்படுத்திய போது,பத்திரிகை செய்தி ஒன்றை மேற்கோள் காட்டி வெளிப்படுத்தியதாக தன் மீது குற்றம் சுமத்தியதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்திய தகவலின் அடிப்படையிலேயே தாம் இந்த தகவலை அன்று சமர்ப்பித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மொரகஹா ஓயாவில் மூழ்கி ஒருவர் மரணம்

கொழும்பு, நவ. 17

பன்வில மொரகஹா ஓயா பாலத்திற்கு அருகில் சக நண்பரகளுடன் நீராடிக்கொண்டிருந்த நபர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பன்வில பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பத்தேகம பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

இவர் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு மடோல்கல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தெல்தெனிய வைத்தியசாலையில் பிரேத பரிசோனை செய்யப்பட்ட பின்னர் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அமைச்சர் றொஷானின் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 17

விளையாட்டு அமைச்சர் றொஷான் ரணசிங்கவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தனது உயிருக்கு ஆபத்து என தெரிவித்துள்ள நிலையிலேயே அவருக்கான அமைச்சரவை பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக பேச்சாளர் இதனை தெரிவித்தார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக அமைச்சரவை பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த ஏழு பேரை தனது பாதுகாப்புக்கு பயன்படுத்துவதற்கு அமைச்சருக்கு உரிமையுள்ளது என தெரிவித்துள்ள நிஹால் தல்துவ, அமைச்சரின் உயிருக்கு அச்சுறுத்தல் என்ற தகவல்களால் அமைச்சரின் பாதுகாப்பிற்கான மேலும் மூவரை நியமித்துள்ளோம் - என அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்திற்கு தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள பிரபல அசைவ உணவகத்துக்கு எதிராக 2018ஆம் ஆண்டு அச்சமயத்தில் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகராக கடமையாற்றிய தி.கிருபனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சுகாதார சீர்கேடு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் குறித்த வழக்கு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அச்சமயத்தில் உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்காத நிலையில் வழக்கானது நீதிமன்றில் தொடர் விசாரணைக்காக நியமிக்கப்ட்டு விசாரணை கடந்த 05 வருடங்களாக நடைபெற்று வந்தது.

இந்நிலையில் வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்புக்காக வழக்கு திகதி இடப்பட்டு இருந்தது. வழக்கின் தீர்ப்பை வழங்கிய மேலதிக நீதவான், இதுவரை நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் உணவக உரிமையாளர் குற்றவாளி என தீர்ப்பளித்தார். அத்துடன் உணவக உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டது.

உணவக உரிமையாளர் சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா முன்னிலயாகி இருந்தார். வழக்கு தொடுநர் சார்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ம.இராஜமேனன், மற்றும் சூ. குணசாந்தன் ஆகியோர் வழக்கினை நெறிப்படுத்தி இருந்தனர்.

# அல்வாயில் மூதாட்டி கொலை; மூவரின் விளக்கமறியல் நீடிப்பு

வடமராட்சி, நவ. 16

அல்வாய் கிழக்கு பகுதியில் மூதாட்டி ஒருவரை கழுத்து நெரித்து கொலை செய்த மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி அல்வாய் கிழக்கு அல்வாய் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து பழனிப்பிள்ளை தில்லைராணி (வயது-89) என்ற மூதாட்டி சடலமாக மீட்க்கப்பட்டிருந்தார்.

சடலத்தில் காயங்கள் காணப்பட்டதன் காரணமாகவும் பிரேத பரிசோதனை அறிக்கையில் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி பி. வாசுதேவா உடற்பாகங்களை இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப் பெற்றதை தொடர்ந்து கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்ட நிலையில் அவ்வீட்டில் இருந்த கணவன், மனைவி மற்றும் வீட்டு பணிப்பெண் ஆகிய மூவர் நெல்லியடி பொலிஸாரால் இம்மாதம் 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பருத்துத்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட போது பருத்தித்துறை நீதவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை மூன்று சந்தேக நபர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார். (அ-2)

# மற்றுமொரு கப்பல் கொழும்புக்கு வருவதற்கு அனுமதி கோரும் சீனா

கொழும்பு, நவ. 17

இலங்கையின் விசேட பொருளாதாரவலயத்தில் தனது அதிநவீன ஆராய்ச்சிக் கப்பல் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான அனுமதியை சீனா கோரியுள்ளது.

சியாங் யாங் கொங் 3 என்ற கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியையே சீனா கோரியுள்ளது.

குறிப்பிட்ட கப்பல் இலங்கையின் விசேட பொருளாதார வலயத்திற்குள் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான அனுமதியை சீனா அதிகாரிகள் கோரியுள்ளனர்.

2024 ஜனவரி 5ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை இந்த கப்பல் இலங்கையில் ஆராய்ச்சிகளில் ஈடுபடும்.

சீனாவின் இயற்கை வளங்களுக்கான அமைச்சுக்கு சொந்தமான கப்பலே இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தியாவின் கடும் கரிசனைகளுக்கு மத்தியில் ஒக்ரோபர் மாதம் சீனக் கப்பல் ஒன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இருவருக்கு இடையே கருத்து வேறுபாடு:

# தந்தையின் வாகனத்தை தனது வாகனத்தால் மோதினார் மகன்!

கொழும்பு, நவ. 17

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக வாகனத்தால் மோதிக் கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காலி-கொழும்பு பிரதான வீதியில் பேருவளை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வர்த்தகரான தந்தை தனது வாகனத்தில் நேற்று முன்தினம் காலை பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் தனது மீன்பிடிப் படகை பரிசோதிப்பதற்காக சென்றபோது பேருவளையிலிருந்து வந்த மகன் பேருவளை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் எதிரில் தான் வந்த வாகனத்தினால் தந்தையின் வாகனத்தை மோதி சேதப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து இருவரது வாகனங்களும் பேருவளை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாதசாரியை மோட்டார் சைக்கிளால் மோதிய பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்

**காயமடைந்தவரை தலைக்கவசத்தாலும் தாக்கினாராம்**

கொழும்பு, நவ. 17

பொலிஸ் மோட்டார் சைக்கிள் மோதி காயமடைந்த நபரை தலைக்கவசத்தினால் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்ட குளியாபிட்டி பொலிஸ் அத்தியட்சகர் அருபொல உப பொலிஸ் பரிசோதகரை பணி இடைநிறுத்தம் செய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான உப பொலிஸ் பரிசோதகர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். காயமடைந்த பாதசாரி குளியாபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நாமல் ராஜபக்ஷ இரட்டை வேடம்!

## பதிலடி கொடுக்கிறது சஜித் அணி

கொழும்பு, நவ. 17

**பட்ஜெட்டுக்கு எதிராக கருத்து வெளியிடுவதுபோல் நாமல் ராஜபக்ஷ நாடகமாடி வருகின்றார் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வருடம் முன்வைக்கப்பட்ட பட்ஜெட்டிலும் இருந்த விடயங்கள் இந்த பட்ஜெட்டிலும் உள்ளன என்று நாமல் ராஜபக்ஷ கூறுவதுடன், பட்ஜெட்டை தோற்கடிக்க எதிரணி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பட்ஜெட் குறித்து சீறிவிட்டு, கடந்த முறை பட்ஜெட்டை ஆதரித்தவர்கள் இந்த முறை எதிர்க்க முடியாது என சமாளிப்பு வார்த்தையையும் பயன்படுத்தியுள்ளார். இதன் மூலம் அவரின் இரட்டை அரசியல் நாடகம் அம்பலமாகின்றது. மொட்டு கட்சி தலைமையகத்தில் அவர்களின் சகாக்கள் முன்னிலையில் இந்த கருத்தைக் கூறட்டும். மக்கள் மத்தியில் இந்த நாடகம் எடுபடாது, அவர்கள் தந்த வலிகளை மக்கள் மறக்கவில்லை- என்றார்.

(அ)



# தினேஷ் ஷாப்டரின் ஆயுள் காப்புறுதி பங்கீடு தொடர்பான உத்தரவு தளர்வு!

கொழும்பு, நவ. 17

வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சார்பாக அவரின் பயனாளிகளுக்கு கிடைக்க வேண்டிய ஆயுள் காப்புறுதி பலன்களை ஒரு வாரத்துக்கு இடைநிறுத்துமாறு இரண்டு காப்புறுதி நிறுவனங்களுக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவு நீதிமன்றத்தால் தளர்த்தப்பட்டுள்ளது.

குறித்த தரப்பினருக்கான காப்புறுதி கொடுப்பனவை நிறுத்த வேண்டிய தேவைப்பாடு தொடர்ந்தும் இல்லையென கொழும்பு மேலதிக நீதவான் ரஜிந்ரா ஜயசூரிய நேற்று முன் தினம் அறிவித்துள்ளார்.

அத்துடன் நட்டயீட்டை பெற்றுக் கொள்ள சில தரப்பினர் முயற்சிப்பது குறித்து எந்த வித ஆதாரங்களும் கிடைக்கப்பெறவில்லை எனவும் நீதவான் அறிவித்துள்ளார்.

வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் மரணம் குற்றச்செயல் என உறுதியாகியுள்ளது.

இந்தநிலையில், வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் சார்பாக அவரின் தரப்பினருக்கு காப்புறுதி நட்டயீடு வழங்கப்படுவதை ஒரு வார காலத்திற்கு கைவிடுவதற்கான உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு காவல்துறை அண்மைய வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தை கோரியிருந்தது.

ஜனசக்தி குழுமத்தின் முன்னாள் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டர், 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி பொரளை பொது மயானத்துக்கு அருகில் தமது காரில் கட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டார்.

பின்னர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

# விபத்துகளில் இருவர் பலி!

கொழும்பு, நவ. 17

பண்டாரவளை மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதியின் வத்தளையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் கொள்கலன் வாகனமொன்று பாதசாரி மீது மோதிய விபத்தில் வத்தளையைச் சேர்ந்த 38 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொள்கலன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், வத்தளை பொலிஸார் விசாரணைகளை முனனெடுத்துள்ளனர்.

இதேவேளை, பண்டாரவளை - பூனாகலை பிரதான வீதியின் துல்கொல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட போது, மற்றுமொரு பஸ் மோதி குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

மக்குல் - எல்ல பகுதியை சேர்ந்த 82 வயதான பெண்ணொருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# பிரான்ஸ்-இலங்கை இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு பேச்சு

கொழும்பு, நவ. 17

பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் உயர் அனர்த்த முகாமைத்துவ மீட்பு ஆகிய துறைகளில் மூலோபாய ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

பிரான்ஸின் இலங்கைக்கான தூதுவர் ஜீன் பிராங்கோயிஸ் பேக்டெட், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்ற போதே இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகை தந்த பிரான்ஸ் தூதுவர் பேக்டெட் இராஜாங்க அமைச்சரினால் வரவேற்கப்பட்டதை தொடர்ந்து இருவருக்குமிடையில் சுமூகமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

பிரான்ஸ், இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் உதவிக்கு நன்றி தெரிவித்த இராஜாங்க அமைச்சர், தற்போதுள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது பிரான்ஸ் தூதரகத்தின் பிரதித் தூதுவர் மேரி-நோயல் டூரிஸ் மற்றும் கடல்சார் பாதுகாப்புக்கு பொறுப்பான இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு அதிகாரி கொமாண்டர் ஜீன் -பாப்டிஸ்ட் ட்ரூச் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(அ)

# போலி விஸாவில் கனடா செல்ல முயன்ற மட்டக்களப்பு இளைஞர் நேற்று சிக்கினார்

கொழும்பு, நவ. 17

போலி கனேடிய விஸாவைப் பயன்படுத்தி டுபாய் ஊடாக கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் நேற்று காலை குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லை அமுலாக்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மட்டக்களப்பை சேர்ந்த 37 வயதானவர்.

நேற்று காலை 08.15 மணிக்கு டுபாய் செல்லவிருந்த ஈகே-653 என்ற எமிரேட்ஸ் விமானத்தில் ஏறுவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

அவரது அனுமதிக்காக அவர் சமர்ப்பித்த ஆவணங்களில் இருந்த கனேடிய விஸா குறித்து சந்தேகம் கொண்ட விமானநிலைய உத்தியோகத்தர்கள், அவரை குடிவரவு மற்றும் எல்லை அமுலாக்க பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

அங்கு நடத்தப்பட்ட தொழில்நுட்ப சோதனையில் இந்த விஸா போலியானது என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவரை கைது செய்த குடிவரவு மற்றும் எல்லைக்கட்டுப்பாட்டு பிரிவினர் நடத்திய விசாரணையில், இந்த விஸாவை தயார் செய்து தரகர் ஒருவரிடம் 30 லட்சம் ரூபாய் கொடுத்ததாகவும், கனடா சென்ற பின்னர் மேலும் 30 லட்சம் ரூபாய் தருவதாக ஒப்புக்கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இரு பல்பொருள் அங்காடிகளுக்கு ரூபா 55,000 தண்டப் பணம் அறவீடு

முல்லைகைத்தீவு, நவ. 17

மல்லாவி நகரில் அமைந்துள்ள இரு பல்பொருள் அங்காடிகளிற்கு 55000 தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள மல்லாவி நகரில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது காலாவதி கடந்த உணவுப்பொருட்கள், மற்றும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப்பொருட்கள், மூல உற்பத்தி திகதி மற்றும் காலாவதி திகதி உட்பட சுட்டுத்துண்டு இல்லாத உணவுப்பொருட்கள், களஞ்சிய அறையில் இலகுவான முறையில் தொற்று ஏற்படக்கூடிய நிலையில் வைத்திருந்த இரு பல்பொருள் அங்காடி உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாவி பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் மாங்குளம் சுற்றுலா நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த பல்பொருள் அங்காடி உரிமையாளர்களுக்கு 32000 ரூபா, 23000 ரூபா வீதம் இரு கடைகளுக்கும் 55000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கிரிக்கெட் இடைக்காலக் குழுவுக்கு எதிரான வழக்கு 20 ஆம் திகதிக்கு!

கொழும்பு, நவ. 17

கிரிக்கெட் இடைக்காலக் கட்டுப்பாட்டுக் குழுவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிக்க புதிய நீதிபதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அமர்வில் இருந்து மற்றுமொரு நீதிபதி நேற்று விலகினார்.

குறித்த மனு டி.என். சமரக்கோன் மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றக் குழு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது இந்த மனு மீதான விசாரணையில் இருந்து விலகுவதாக நீதிபதி நீல் இத்தவெல தெரிவித்தார்.

இதன்படி, மனு விசாரணைக்கு புதிய நீதிபதிகள் குழு ஒன்றைப் பெயரிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷங்க பந்துல கருணாரத்னவுக்கு உரிய மனு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த விசாரணையில் இருந்து இதுவரை 3 நீதிபதிகள் விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மனு மீதான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(அ)

# திட்டமிடலற்ற பட்ஜெட் மூலம் மக்களை ஏமாற்றுகிறது அரசு

## சி. கா. செந்தில்வேல் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 17

**எந்தவித திட்டமிடலும் இல்லாமல் இந்த அரசாங்கம் புதிய பட்ஜெட்டில் நாட்டு மக்களை ஏமாற்ற நினைப்பதாக புதிய மார்க்சிச லெனின் கட்சியின் பொதுச்செயலாளர் சி. கா.செந்தில்வேல் குற்றம்சுமத்தியுள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

இந்த அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும். மக்கள் வீதிகளில் இறங்கி அரசாங்கத்துக்கு எதிராக போராட வேண்டும். மக்கள் நலன் இல்லாத இந்த அரசாங்கம் தேவையில்லை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கொண்டு வரப்பட்ட பட்ஜெட்டில் மக்கள் நலன் சார்ந்த எந்த திட்டங்களும் இல்லை.

யானை பசிக்கு சோளப்பொறி என்ற கதை போல் அவரது பாதீடு அமைந்துள்ளது.

ஆண்டாண்டு காலமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் இருந்து மக்கள் நலன் சார்ந்த பட்ஜெட் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

மாறாக இவர்கள் தனியார் நிறுவனங்களை வளைத்து போடுவதற்கும், அவர்களை ஊக்குவிக்கவுமே திட்டங்களை கொண்டு வருகின்றார்கள்.

இந்த அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தை திருப்திபடுத்துவதற்காக இந்த புதிய பட்ஜெட்டை தயாரித்துள்ளதே தவிர மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை அறிவிக்கவில்லை.

நாட்டின் உயர்நீதிமன்றம் நல்லதொரு தீர்ப்பினை வழங்கி இருக்கின்றது. இந்த நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலைமை அடைந்தமைக்கு முன்னாள் ஆட்சியாளர்களான ராஜபக்ஷ குடும்பத்தினர், முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரே காரணம் என தெட்டத் தெளிவாக தீர்ப்பளித்திருக்கின்றது.

ஆண்டாண்டு காலமாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கொண்டுவந்த பொருளாதாரத் திட்டங்கள் அனைத்துமே அடித்தட்டு மக்களின் நலன் சார்ந்ததாக அமைந்திருக்கவில்லை.

மாறாக அவை மேல்வர்க்கத்தினரை திருப்திபடுத்தும் கண்ணோட்டத்திலேயே அமைந்திருந்தன.

எனவே, மக்கள் வீதிகளில் இறங்கி போராட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது கட்சி உள்ளது-என்றார். (அ)

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் கட்டுவனில் கொள்ளை முயற்சி!

## முகமூடி கழன்றதால் தப்பியோடிய கொள்ளையர்கள்

யாழ்ப்பாணம், நவ. 17

தெல்லிப்பழை, கட்டுவன் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ஊரான் கூடையில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் மூன்று பிள்ளைகளுடன் தனிமையில் வசித்த பெண்ணைத் தாக்கிக் கொள்ளையிடவும், அவரைக் கொலை செய்யவும் முயன்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் நடந்துள்ளது.

மழை பெய்து கொண்டிருந்த நேரத்தில் முகமூடி அணிந்து, கைகளுக்கு கையுறை அணிந்து கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

மறைந்திருந்த கொள்ளையர்கள் இயற்கை உபாதைக்குச் சென்ற பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டிக் கொள்ளையிட முயன்றுள்ளனர்.

பெண்ணை வீட்டுக்குள் கொண்டு செல்ல முயன்றபோது, பெண் கொள்ளையர்களுடன் முரண்பட்டுத் தன்னைக் காப்பாற்ற முயன்றுள்ளார். அப்போது கொள்ளையிட வந்தவர்களில் ஒருவரின் முகமூடியை அகற்றி பெண் அவர்களை இனங்கண்டுள்ளார்.

அதையடுத்து பெண்ணை அவர்கள் கொல்ல முயன்றுள்ளனர். ஆயினும் பெண் அவர்களிடம் இருந்து ஒருவாறு தப்பித்து வீட்டுக்குள் ஓடியுள்ளார். முகமூடி கழன்றதை அடுத்து கொள்ளையர்களும் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

கழுத்தில் காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் தெல்லிப்பழை மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒரு வாரத்துக்கு முன்னர் அந்த வீட்டில் இருந்த எரி வாயு சிலிண்டர் திருடப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தரமற்ற மருந்து இறக்குமதியுடன் தொடர்புடைய சுகாதார அதிகாரிகளை கைது செய்ய உத்தரவு!

கொழும்பு, நவ. 17

தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசி குப்பிகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் அரசாங்கத்தின் வழமையான நடைமுறைகளை மீறி செயற்படும் சுகாதார அமைச்சின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் அனைவரையும் அவர்களது தரம் பாராமல் கைது செய்யுமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த தடுப்பு மருந்துகளை இறக்குமதி செய்ததாக கூறப்படும் நிறுவனத்தின் உரிமையாளர் ஜானக பெர்னாண்டோவை எதிர்வரும் நவம்பர் மாதம் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

தேசிய மருந்துகள் ஒழுங்கு முறை ஆணையத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி மருத்துவர் விஜித் குணசேகரவுக்கு நோட்டீஸ் அனுப்பிய நீதவான், கேள்விக்குரிய தடுப்பூசிகள் சீல் வைக்கப்பட்டதற்கான காரணம் மற்றும் அவற்றின் நிலை தொடர்பான அறிக்கையை நேற்று முன்தினம் முதல் ஒரு வாரத்திற்குள் நீதிமன்றத்திலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலும் (சிஐடி) சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார். பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு, குறிப்பிட்ட தரநிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளின் கீழ் சேமித்து வைக்க நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அவரது உத்தரவை பதிவு செய்த நீதிவான், முன்பு பிறப்




பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுகளின்படி செயல்படாமல் வேண்டுமென்றே காலதாமதம் செய்வதாக கருதப்படுகிறது. கலாநிதி விஜித் குணசேகர நீதிமன்றத்தினால் கோரப்பட்ட அறிக்கையை வெளியிடாத காரணத்தினால் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மன்றில் கோரினார். அறிக்கை சமர்பிப்பதற்கான திகதி முந்தைய நாள் குறிப்பிடப்படாததால் அழைப்பாணை மாத்திரமே வழங்கப்படுமென நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர்களின் தொலைபேசிப் பதிவுகளைப் பெற்றுச் சரிபார்க்குமாறும், குறிப்பாக வட்ஸ்அப் பதிவுகளை உரிய முறைகள் மூலம் சரிபார்க்குமாறும் சி.ஐ.டிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கிரிஹாகம நீதிமன்றில் நீண்ட விளக்கமளித்தார்.

பணம் வழங்குவதில் பின்பற்ற வேண்டிய முறையான நடைமுறையைப் பின்பற்றாமல் 900 இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி குப்பிகளுக்கு 44 மில்லியன் வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.

குறித்த தடுப்பூசியின் 3,985 குப்பிகள் கேள்விகோரல் மூலம் கோரப்பட்டு கடுமையான நரம்பியல் கோளாறுகள் உள்ள நோயாளிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் விசாரணைகளில் நான்கு நோயாளிகள் ஆபத்தான நிலைமைகளை எதிர்கொண்டதை உறுதிப்படுத்தியதாகவும் அரச பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு தெரிவித்தார்.

இவற்றில் ஆயிரம் தடுப்பூசிகள் தடை செய்யப்பட்டுள்ளன. சந்தேக நபரின் கணக்கில் 900 குப்பிகளுக்கு பணம் வரவு வைக்கப்பட்ட பின்னர், சந்தேக நபர் ரூ.67,000 மட்டுமே மீதம் வைத்ததாகவும், மீதிப்பணத்தை எடுத்துக் கொண்டதாகவும் அவர் நீதிமன்றத்தில் கூறினார்.

ஜனவரி 4 ஆம் திகதி, சந்தேகத்திற்குரிய தடுப்பூசியின் 7,500 குப்பிகளை இறக்குமதி செய்யும்படி சந்தேகநபரிடம் கோரப்பட்டது, ஆனால் அவருக்கு 22,500 தடுப்பூசிகளை வழங்குவதற்கு அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது மற்றும் கேள்வி கோரல் அழைப்பின் அவசர கொள்முதல் முதல் சதித் திட்டத்தின் இணைப்புகளில் அவரும் ஒருவர் என்று கிரிஹாகம கூறினார். பதிவுச் சான்றிதழுக்காக மூன்று முறை விண்ணப்பித்தும் கிடைக்கவில்லை. ரூ. 44 மில்லியன் மோசடி செய்யப்பட்டுள்ளது மற்றும் இது பொது சொத்து சட்டத்தின் கீழ் குற்றமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இருந்து மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதாக சந்தேக நபர் தெரிவித்திருந்தபோதிலும் கொள்வனவு செய்யப்படவில்லை. தேசிய இரத்த வங்கியால் நடைமுறைப் படுத்தப்பட்ட சட்ட நடைமுறைகளை மீறி இரத்த பிளாஸ்மாவும் வாங்கப்பட்டது. கேள்வி கோரலுக்கு பிறகு, முதன்முறையாக, அவர் 18 முறை புரோட்டீன் பரிசோதனைக்காக தேசிய இரத்த வங்கியில் இருந்து இரத்தத் தட்டுக்களை வாங்கினார் என்றும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

“மருந்துகளை வாங்கும் போது முறையான தரநிலைகளை சரிபார்க்க வேண்டும். அந்த வகையில் மற்றொரு அதிகாரிகள் குழு செயல்பட்டு வருகிறது. இவர்கள் ஒன்று சேராமல் இதைச் செய்ய முடியாது. சந்தேகத்திற்குரிய நபருக்குப் பின்னால் ஒரு குழு உள்ளது, அவர்கள் கடுமையான துஷ்பிரயோக செயல்முறையைத் தொடங்குகின்றனர். அவர்களின் தேவைக்காக இது நடைபெறுகிறது என்று அவர் கூறினார்.

சந்தேகநபர் சார்பில் நீதிமன்றில் வாதிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்ததிஸ்ஸ, “இந்த சம்பவம் தொடர்பில் எனது கட்சிக்காரர் மீது பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்ட முடியாது. அவசரகால கொள்வனவுகளை அமைச்சரவை, சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் வைத்தியர் விஜித குணசேகர மற்றும் ஆவணத்தை தயாரித்த குழுவினரிடம் முன்வைத்த நபரே இந்த சம்பவத்திற்கு பொறுப்பானவர்.

சந்தேகநபரை குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கை முடித்து வைப்பதாகவும் அவர் கூறினார்.

மூலப்பொருட்கள் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்படவில்லை என்பதை ஒப்புக் கொண்ட அவர், சம்பவம் தொடர்பாக கைது செய்ய வேண்டிய உயர் அதிகாரிகள் தலைமறைவாக உள்ளதாகவும், சந்தேக நபரை தகுந்த பிணையில் விடுவிக்குமாறும் நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டார்.

தடுப்பூசிகளை தயாரிப்பதற்கு 2015 ஆம் ஆண்டு தனது வாடிக்கையாளர் ஒப்புதல் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# கனகர் கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள 73 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம்

திருமலை, நவ. 17

**மிக நீண்டகாலமாக மக்கள் போராட்டமாகவும், தமிழ்த் தேசிய அரசியற் பிரமுகர்களின் பாரிய பிரயத்தனத்தினமாகவும் இருந்த பொத்துவில் கனகர் கிராமத்தில் மீள்குடியேற்றப்படும் குடும்பங்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் திருகோணமலையில் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது.**



இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான கலையரசன், முஷரப், கபில அத்துக்கோரள, பொதுவில் பிரதேச செயலாளர் உள்ளிட்ட குழுவினர், கனகர் கிராமத்தில் முதற்கட்டமாக மீள்குடியேற்றப்பட்ட பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பொத்துவில் கனகர் கிராமத்தில் பூர்வீகமாக குடியிருந்து யுத்த காலத்தில் வெளியேறிய மக்களை மீள்குடியேற்றும் முகமாக அப்பிரதேச மக்களால் பல வருடங்களாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனால் பல வருட பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் டபிள்யூ. டி. வீரசிங்க, பொத்துவில் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் பா.உ முஷரப் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர், பொத்துவில் பிரதேச செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்பின் காரணமாக தற்போது அம்மக்களில் முதற்கட்டமாக பொத்துவில் பிரதேச செயலகத்தினூடாக தேர்வு செய்யப்பட்ட 73 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு!



மட்டக்களப்பு, நவ. 17

தேசிய மட்டத்தில் சாதனை படைத்த வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் உதயகுமார் தவத்திருமகள் தலைமையில் நேற்று முன் தினம் இடம் பெற்றது.

இதன் போது சாதனை படைத்த மாணவிகளை மட்டு நகர் காந்தி பூங்கா முன்றலில் இருந்து பேண்ட் வாத்திய இசை முழங்க ஆசிரியர்களினால் மாணவிகளுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக கல்லூரியின் பிரதான மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பரத நடனத்தில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்ட மாணவி விக்னேஷ்வரன் இஷானிகா மற்றும் ஆங்கில போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்ட மாணவி சசிகுமார் ஹர்ஷிகா ஆகிய மாணவிகள் இருவரும் வாழ்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக ஆசிரியர் ஆலோசகர்களான நடன ஆசிரியர் சிவஞானஜோதி குரு, ஆங்கில ஆசிரியர் மகேஸ்வரன் விக்னேஸ்வரி மற்றும் கல்லூரி பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (அ)

# திரிபோசா திருடர்களுக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

மட்டக்களப்பு, நவ. 17

சுகாதார அமைச்சின் தாய் சேய் நலன்புரி திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு எடுத்து வரப்பட்ட திரிபோசா பக்கட்டுகளை திருடி விற்பனை செய்த மூவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு ரயிலில் பொருட்கள் பெட்டியின் ஊடாக எடுத்துவரப்பட்ட திரிபோசா பக்கட்டுகளில் 750 கிராம் எடை கொண்ட 150 பக்கெட்டுகளை திருடிய நபர்களே இவ்வாறு மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

(அ)

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் உலக நீரழிவு தின உணவுக் கண்காட்சி

அம்பாறை, நவ. 17

நீரழிவு சிகிச்சைக்கான அனுகல் இப்போது இல்லா விட்டால் எப்போது ? எனும் தொனிப் பொருளில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை ஒழுங்கு செய்திருந்த உணவுக் கண்காட்சியும், விழிப்புணர்வு கருத்தரங்கும் வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் சனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் நீரழிவு நோயிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான உணவு பழக்க வழக்கங்கள் தொடர்பான கண்காட்சியும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம்பெற்றன.

(அ)

# தொற்றுக்கழிவுகள், திண்மக்கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு களவிஜயம்





அம்பாறை, நவ. 17

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் தொற்றுக்கழிவு மற்றும் திண்மக் கழிவுளை முகாமைத்துவம் செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கான கள விஜயமும், பயிற்சிநெறியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த 10 ஆம் திகதி சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் பொதுச்சுகாதார மற்றும் தர முகாமைத்துவப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.எம்.ஹில்மி, வளவாளராக கலந்து கொண்டு இந்நிகழ்வில் விரிவுரையாற்றினார். (அ)

# நிந்தவூர் வைத்தியசாலையின் உலக நீரிழிவு தின நிகழ்வுகள்




அம்பாறை, நவ. 17

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம்க றிபாஸ் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைவாக உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு நிந்தவூர் ஆதார வைத்தியசாலையும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து உலக நீரிழிவு தின விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வும் கருத்தரங்கும் இடம்பெற்றது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.பி.அப்துல் வாஜித் தலைமையில் "நீரிழிவுக்கான பராமரிப்பை அணுகுவோம்" எனும் தொனிப் பொருளில் இடம் பெற்ற நடைபவனி பெரிய பள்ளிவாசல் முன்றலில் இருந்து வைத்தியசாலை வரை இடம்பெற்று தொடர்ந்தும் விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபெற்றது. இதில் வைத்தியசாலையின் வைத்தியர் ஏ.எம். சுமையா அவர்கள் விரிவுரையாற்றினார்கள் .

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய மேற்பார்வையாளர்கள், தாதியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், நிந்தவூர் ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பெரிய ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகசபை தலைவர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அறபு கல்லூரி மாணவர்கள், வைத்தியசாலைக்கு வந்திருந்த பயனாளிகள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வின் போது ஆயுர்வேத வைத்தியசாலையினால் இலைக்கஞ்சியும் பரிமாறப்பட்டது.

"இனிப்பை குறைப்போம் நீரிழிவை ஒழிப்போம்" தொனிப் பொருளில் மேற்படி நிகழ்வுகள் நடைபெற்றன.

(அ)

# சீன ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரி

## பைடனின் விமர்சனத்தால் எழுந்த சர்ச்சை

**சான்பிரான்சிஸ்கோ, நவ. 17**

**சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கை சர்வாதிகாரி என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளமை சர்வ தேச அரசியல் களத்தில் பேசு பொருளாக மாறியுள்ளது.**

அமெரிக்காவின் சான்பிரான் சிஸ்கோவில் நேற்று முன் தினம் நடைபெற்ற 'ஏபிஇசி' பொரு ளாதார உச்சி நாடுகளின் தலை வர்கள் கூட்டத்தில் சீன ஜனாதி பதி ஷி ஜின்பிங்கும், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் சந் தித்துக் கொண்டனர்.

அப்போது இரு நாடுகளுக் கும் இடையிலான பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின் போது, இருதரப்பு உறவுகள், பிராந்திய மற்றும் முக்கிய உலகளாவிய பிரச்னைகளான ஈரான், மத்திய கிழக்கு, உக்ரைன், தாய்வான், இந்தோ-பசிபிக், பொருளாதார பிரச்னைகள், செயற்கை நுண் ணறிவு, மருந்துகள் மற்றும் காலநிலை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலை வர்களும் விவாதித்தனர் என மூத்த நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து ஜோ பைடன் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டார். அப்போது பேசிய அவர்,

"சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் குடனான பேச்சுவார்த்தையில் இருதரப்புக்கும் இடையே ஏற் பட்டுள்ள உறவுகளை சரி செய் வதில் முன்னேற்றம் ஏற்பட்டுள் ளது.



நாங்கள் மிகவும் ஆக்கபூர்வ மான மற்றும் பயனுள்ள விவா தங்களை மேற்கொண்டோம். நாங்கள் சில முக்கியமான முடி வுகளை செய்துள்ளோம்.

ஷி ஜின்பிங்குக்கும் எனக்கும் இடையிலான கருத்து வேறுபா டுகளைக் களைய நேரடியான தொலைபேசி அழைப்பில் இரு தரப்பிலும் பேசிக் கொள்வது என்று முடிவு செய்து இருக்கி றோம்." என்றார்.

அதைத் தொடர்ந்து செய்தி யாளர்கள் அவரிடம், சீன ஜனா திபதியை இன்னும் சர்வாதிகாரி யாகத்தான் நீங்கள் கருதுகிறீர் களா? எனக கேட்டனர்.

இதற்கு பதிலளித்த ஜோ பைடன்,

"ஷி ஜின்பிங், கம்யூனிச நாட்டை வழிநடத்தும் ஒரு சர்வாதிகாரி, மேலும் பிற நாடு களுடன் ஒப்பிடும் போது சீன அரசாங்கம் முற்றிலும் மாறுபட் டது." என்றார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு சீன ஜனாதி பதியை சர்வாதிகாரி என்று ஜோ பைடன் விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இருவருக்கும் இடையில் ஆக் கப்பூர்வமான சந்திப்பொன்று நடந்த பின்புலத்தில் ஜனாதிபதி பைடன் வெளியிட்டுள்ள இந்த கருத்து சீனாவை அதிருப்திக்கு உள்ளாகியுள்ளது. நிச்சயமாக இதற்கு சீனா எதிர்வினையாற் றும் என சர்வதேச அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# நூற்றாண்டின் மத்தியில் வெப்பத்தால் ஏற்படும் மரண எண்ணிக்கை 4 மடங்காக அதிகரிக்கும்!



*லண்டன், நவ. 17*

காலநிலை மாற்றத்தால் இந்த நூற்றாண்டின் இறுதியில் வெப்பத்தால் ஏற்படும் பலி எண்ணிக்கை 370 வீதம் அதிக ரிக்கும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

பிரபல பத்திரிக்கையான 'தி லான்செட்' அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

உலகளவில் வெப்பத்தால் ஏற்படும் உயிரிழப்புகள் குறித் தும், காலநிலை மாற்றம் குறித் தும் குறித்த பத்திரிகையில் வெளியான கட்டுரையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

'மனிதனால் உருவாக்கப் பட்ட காலநிலை மாற்றத்தால், உலக மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை அதிகரிப்பை 1.5 பாகை செல்சியஸாகக் கட் டுப்படுத்துவது அவசியமாகி றது. இல்லாவிட்டால் கடுமை யான விளைவுகள் ஏற்படும்.

தொழில்துறை உற்பத்தியை குறைக்க வேண்டும். வினாடிக்கு 1,337 தொன் காபனீரொட்சைட் வெளியேற்றப்படுகிறது. காபன் வெளியேற்றத்தை குறைக்க வேண் டும்.

கடந்த 1991-2000ஆம் ஆண் டுகளுடன் ஒப்பிடும்போது 2013-2022ஆம் ஆண்டுகளில் 65 வயதுக்கு மேற்பட்டவர்க ளில் பலர் வெப்பம் தொடர் பான பிரச்சினைகளால் 85 வீதம் பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒரு ஆண்டில் 5 மடங்கு அளவிற்கு மேல் வெப்பத்தால் இறப்புகள் நிகழ வாய்ப்புள்ளது.

கடந்த 1981 முதல் 2010ம் ஆண்டு வரை ஒப்பிடும்போது, கடந்த 2021ஆம் ஆண்டில் மட் டும் 122 நாடுகளில் 127 மில்லி யனுக்கும் அதிகமான மக்கள் கடுமையான உணவு நெருக்கடி யால் பாதிக்கப்பட்டனர்.

மாறிவரும் காலநிலை மாற் றங்களால் கொடிய தொற்று நோய் பரவலும் அதிகரித்து வருகிறது.

வெப்பமயமாதலால் கடலில் விப்ரியோ பாக்டீரியாவின் பர வல் அதிகரித்துள்ளது. இதன்மூ லம் நோய் பரவல் ஏற்படுகிறது.

உலகின் வெப்பநிலை, கடந்த 2022ல் 1.1 பாகை செல்சியஸ் கூடியது. இந்த நூற்றாண்டின் இறுதியில், வெப்பநிலை 2 பாகை செல்சியஸ் அளவிற்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

கடுமையான வெப்பத்தால் ஏற்படும் இறப்புகள் 370 சதவீ தம் அளவிற்கு அதிகரிக்க வாய்ப் புள்ளது' என்று குறிப்பிடப்பட் டுள்ளது. (அ)



# ஐஸ்லாந்தில் அவசரநிலை!

ஐஸ்லாந்து அரசாங்கம் அந்த நாட்டில் அவசர நிலையை அறி வித்துள்ளது.

ஐஸ்லாந்தில் ஏற்பட்ட தொடர் நிலநடுக்கம் காரணமாக எரிமலை ஏற்படுவதற்கான அபா யம் உள்ளதால் இவ்வாறு அவச ரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகவும் அமைதி யான நாடு என கருதப்படும் ஐஸ்லாந்தில் 14 மணிநேரத்தில் 800 முறை நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது.

இதன் காரணமாக பல்வேறு பகுதிகளில் இருந்தும் புகை வெளியேறி வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எரிமலைக் குழம்புகளால் ஏற்படும் சேதத்தை குறைப்ப தற்கு இரண்டு மைல் நீளமுள்ள புவிவெப்ப சுவர் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

அத்துடன், ஐஸ்லாந்தில் நில நடுக்கம் மற்றும் எரிமலை கார ணமாக முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு வதாக தெரிவிக்கப்படுகிறது.

# இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தப்பட வேண்டும்!

## ஐ.நாவில் நிறைவேறிய தீர்மானம்

ஜெனிவா, நவ. 17

ஐக்கிய நாடுகளின் பாது காப்பு சபை, உடனடி தற்காலிக போர் நிறுத்தத்துக்கும் காஸா வின் மக்களுக்குத் தேவையான வாழ்வாதார உதவிகள் தடை யின்றி கிடைக்கவும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பு பாதுகாப் புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் விடுக்கப்பட்டுள்ளது.

உடனடியாகவும் நிபந்தனை யின்றியும் ஹமாஸ் பிடியில் வைத் துள்ள பிணைக்கைதிகளை விடு விக்க வேண்டுமெனவும் குறித்த தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக குழந்தைகள் விடு விக்கப்படுவதும் உடனடி வாழ் வாதார உதவிகள் காஸாவுக்கு கிடைக்க செய்யவும் சபை வலி யுறுத்தியுள்ளது.

இந்தத் தீர்மானம் 12 நாடுக ளின் ஒப்புதலுடன் நிறைவேற் றப்பட்டுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் இந்தத் தீர்மானத்தைப் புறக்கணித்துள்ளன.




தீர்மான வரைவில், ஒக்டோ பர் 7ஆம் திகதி ஹமாஸ் தாக்கு தலுக்கு ஐக்கிய நாடுகள் கண்ட னம் தெரிவிக்கவில்லை என்ப தால் புறக்கணித்ததாக அமெரிக் காவின் ஐக்கிய நாடுகளின் தூது வர் லிண்டா தாமஸ் கிரீன்பில்ட் தெரிவித்துள்ளார்.

நான்கு முறைக்குமேல் தீர்மா னம் நிறைவேற்ற முயற்சித்து இந்த முறை தான் நாடுகளின் பெரும்பான்மை ஒப்புதலின் பேரில் தீர்மானம் நிறைவேற் றப்பட்டுள்ளது என்பது குறிப்பி டத்தக்கது.

முன்னதாக அமெரிக்கா முன் மொழிந்த, உறுப்பினராகவுள்ள நாடுகள் பயங்கரவாதத்தில் இருந்து அமைதி மற்றும் பாது காப்பை உறுதி செய்யும்பொ ருட்டு தங்களைத் தற்காத்துக் கொள்ளும் உரிமையை ஐ.நா உறுதிப்படுத்த வேண்டும் என் கிற தீர்மானம் சீனா மற்றும் ரஷ்யாவால் மறுக்கப்பட்டது. (அ)

# அடுத்த ஆண்டு மக்கள் போராட்டம் பாரியதொரு புரட்சியாக வெடிக்கும்

## எச்சரிக்கிறார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, நவ. 17

**அரச வருமான இலக்கை தொகையில் மாத்திரம் குறிப்பிட்ட ஜனாதிபதி வருமானத்தை திரட்டிக்கொள்ளும் யோசனைகளை குறிப்பிடவில்லை. வரி விதிப்பு மாத்திரமே அவரது பிரதான பொருளாதார கொள்கையாக உள்ளது. ஆகவே இந்த யோசனையை செயற்படுத்தினால் அடுத்த ஆண்டில் முதல் ஆறு மாத காலத்துக்குள் மக்கள் போராட்டம் பாரியதொரு புரட்சியாக வெடிக்கும். ஆகவே மக்கள் போராட்டத்தை தடுக்க ஆட்சியாளர்களும், ஆளும் தரப்பும் அறிவுபூர்வமாக சிந்திக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் யதார்த்தபூர்வமற்றது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின் பல முன்மொழிவுகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டும் முன்வைக்கப்பட்டன. ஆனால் எவையும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரச வருமான இலக்கு 3130 பில்லியன் ரூபாவாக குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது 2500 பில்லியன் ரூபா வருமானம் திரட்டப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடையவில்லை. இவ்வாறான நிலையில் 2024 ஆம் ஆண்டு 3820 பில்லியன் ரூபா அரச வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. 2022 ஆம் ஆண்டு 8.5 சதவீதமாக காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியை 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 15.5 சதவீதமாக அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இது முற்றிலும் சாத்தியமற்றது. இந்த யோசனைகளை செயற்படுத்தினால் சமூக கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகள் தோற்றம் பெறும்.

2023 ஆம் ஆண்டு பெறுமதி சேர் வரி ஊடாக 908 பில்லியன் ரூபா வரி வருமானம் எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் நிறைவடைந்த 09 மாத காலப் பகுதிக்குள் 680 பில்லியன் ரூபா வருமானமே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வரி வருமானத்தை பெறுவதற்காக ஒட்டுமொத்த மக்களின் உழைப்பு மற்றும் சேமிப்பு சூறையாடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு எரிபொருளுக்கும் 10 சதவீத பெறுமதி சேர் வரி அறவிடப்படும். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இந்த ஆண்டு 88 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது. ஒரு லீற்றர் டீசலில் இருந்து 80 வரியும், ஒரு லீற்றர் பெற்றோலில் இருந்து 120 ரூபா வரியும் அரசுக்கு செலுத்தப்படுகிறது. ஆகவே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நட்டமடைகிறது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மின்சார சபை கடந்த எட்டு மாத காலப் பகுதியில் 20 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய மாதங்களில் மாத்திரம் மின்சார சபை 20 பில்லியன் ரூபா இலாபமடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் மின்சார கட்டண அதிகரிப்பால் தொழிற்றுறையல்ல மக்கள் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் மக்கள் தமது சொத்துக்களையும், தங்க ஆபரணங்களையும் விற்று வாழ்கிறார்கள். 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள், அரச வருமானம் எதிர்பார்ப்பு மற்றும் வரி விதிப்பு ஆகிய தீர்மானங்களினால் அடுத்த ஆண்டு மக்கள் போராட்டம் மீண்டும் தலைத்தூக்கும்.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது அது அவரது இறுதி வரவு-செலவுத் திட்டம் என்பதை அவரிடம் குறிப்பிட்டேன், அதேபோல் தோற்றம் பெறவுள்ள மக்கள் போராட்டத்தை அரசாங்கத்தால் தடுக்கமுடியாது என பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்த சரத் வீரசேகரவிடம் குறிப்பிட்டேன். எனது கருத்து உண்மையாகியுள்ளது.

அரச வருமான இலக்கை தொகையில் மாத்திரம் குறிப்பிட்ட ஜனாதிபதி வருமானத்தை திரட்டிக்கொள்ளும் யோசனைகளை குறிப்பிடவில்லை. வரி விதிப்பு மாத்திரமே அவரது பிரதான பொருளாதார கொள்கையாக உள்ளது.

ஆகவே இந்த யோசனையை செயற்படுத்தினால் அடுத்த ஆண்டில் முதல் ஆறு மாத காலத்துக்குள் மக்கள் போராட்டம் பாரியதொரு புரட்சியாக வெடிக்கும். ஆகவே மக்கள் போராட்டத்தை தடுக்க ஆட்சியாளர்களும், ஆளும் தரப்பும் அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும்-என்றார்.

(அ)

# யால சரணாலயத்தில் சூடு; சந்தேகத்தில் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 17

யால சரணாலயத்திற்குள் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுற்றிவளைப்பின்போதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யால சரணாலயத்தின் 06 ஆம் இலக்க வலயத்தில் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் வனவள அதிகாரிகள் சோதனையில் ஈடுப்பட்டனர்.

இதன்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் திஸ்ஸ மஹாராம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வனவள பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இந்த சம்பவம் தொடர்பில் கைது செயயப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(அ)

# மதில் விழுந்து மாணவி பலி; விசாரணைக்கு விசேட குழு!

கொழும்பு, நவ. 17

வெல்லம்பிட்டி - வெஹர கொட கனிஷ்ட வித்தியாலயத்தில் நீர் குழாய்கள் பொருத்தப்பட்டிருந்த மதில் சுவரொன்று உடைந்து வீழ்ந்ததில் மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் எயார் மார்சல் ரொஷான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேல் மாகாண பிரதம செயலாளர் பிரதீப் யசரத்னவுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஒரு வாரத்திற்குள் விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றதும், சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொரு மாணவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

வெல்லம்பிட்டி, வெஹெர கொட கனிஷ்ட வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு தண்ணீர் பெறுவதற்காக, குழாய்களுடன் கூடிய கட்டமைப்பானது கொங்கிரீட் செய்யப்பட்ட மதிலுடன் இணைத்து நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

குறித்த மதில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் காயமடைந்த 5 மாணவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# 144 வாக்குகளுடன் இலங்கை தெரிவு!

கொழும்பு, நவ. 17

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் நிர்வாக சபைக்கு இலங்கை 144 வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2023-2027 காலகட்டத்திற்கான 58 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்புக்கான தேர்தல் நேற்று முன் தினம் பரிஸில் நடந்த 42 ஆவது யுனெஸ்கோ பொது மாநாட்டில் நடைபெற்றது.

வாக்களிப்புச் செயற்பாட்டில் பங்குபற்றிய 188 உறுப்பு நாடுகளில் 144 வாக்குகளைப் பெற்று இலங்கை நிறைவேற்றுச் சபையில் தனது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில், ஒன்பது வேட்பாளர்களில் ஆறு பேர் யுனெஸ்கோ உறுப்பு நாடுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இலங்கையுடன் பாகிஸ்தான், இந்தோனேஷியா, பங்களாதேஷ், கொரியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளாகும்.

(அ)

# எனக்கும் குடும்பத்துக்கும் பெரும் உயிர் அச்சுறுத்தல்!

## சபாநாயகரிடம் ரொஷான் முறைப்பாடு

கொழும்பு, நவ. 17

எனக்கும் எனது குடும்பத்துக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனது 13 வருட அரசியல் வாழ்க்கையில் யாரிடமும் எந்த கொடுக்கல் வாங்களிலும் ஈடுபடவில்லை. அரச செலவில் விமானத்தில் சென்றதில்லை. மானிய எரிபொருள் வாங்கியதில்லையென விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் நிறுவனத் தலைவர் சம்மி சில்வா கூறியதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், தன்னை அச்சுறுத்தும் விதத்தில் சம்மி சில்வா கருத்துக்களை முன்வைத்ததாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு தனக்கும் தனது குடும்பத்திற்கும் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகவும் இதன்போது சபாநாயகரிடம் அவர் முறையிட்டார். (அ)

# நுகர்வோர் அதிகார சபை இவ்வருடம் 22 கோடி ரூபா அபராதம் வசூலித்தது!

கொழும்பு, நவ. 17

இந்த வருடம் நாடளாவிய ரீதியில் பல கடைகள் மற்றும் பொருள் கொள்வனவு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் மூலம் 22 கோடி ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை அறிவித்துள்ளது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், இருப்புக்களை மறைத்து வைத்தல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், விலைகளை காட்சிப்படுத்தாமை போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதத்திற்கு இடையில் இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் சுமார் 22,000 சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு அவற்றில் 19,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் மாத்திரம் பொலன்னறுவை மற்றும் நுவரெலியா பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பல சுற்றிவளைப்புக்களின் மூலம் 04 இலட்சம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என நுகர்வோர் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

## நாட்டில்....

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற டீ.எஸ் சேனநாயக்க கல்லூரியின் ஸ்தாபகரும் தலைசிறந்த கல்வியலாளருமான மறைந்த ஆர்.ஐ.ரி. அலஸின் 10 ஆவது நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பணம் இல்லை என்ற காரணத்தால் எந்தவொரு பிள்ளைக்கும் உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போய்விடக்கூடாதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சொத்துக்களை விற்று பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்நாட்டு பிள்ளைகளின் உயர் கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய பல்கலைக்கழங்களை ஆரம்பிக்கவிருப்பதாகவும், அதற்கு பங்களிப்பு வழங்கும் தனியார் துறையினருக்கு குறைவின்றி ஆதரவு வழங்க எதிர்பார்ப்பதாகவும் உறுதியளித்தார்.

நாட்டின் மீது அக்கறை இருக்குமாயின் இந்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்திற்காக புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க புலம்பெயர் தமிழ்இ சிங்கள இலங்கையருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க-

பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை பெற்றுக்கொடுப்பதே அனைத்து பெற்றோரின் எதிர்பார்ப்பாகும். கல்வியை தமிழ்இ சிங்கள மொழிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் ஜப்பான், சீனா, அரபு, கொரிய மொழிகளையும் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதோடு, அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆங்கில அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டமும் தயாரிக்கப்படும்.

இந்நாட்டின் உயர்கல்வி தொடர்பில் சிறப்பு கவனம் செலுத்துகிறோம். இந்நாட்டின் இலவசக் கல்வி இருப்பதாக கூறினாலும் பெருமளவானோர் உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். உலகின் பல்வேறு நாடுகளில் இந்நாட்டு பிள்ளைகள் உயர்கல்வி பயில்கிறார்கள். அந்த நாடுகளில் காணப்படும் கல்வி முறைமைகளை நமது நாட்டிலும் செயற்படுத்துவோம்.

பல்கலைக்கழங்களுக்கு செலுத்த அவசியமான பணத்தை பல்கலைக்கழகங்களுக்கு வழங்குவதே இலவச உயர்கல்வியாகும் என பலரும் கூறுகிறார்கள். இருப்பினும் மற்றைய நாடுகளில் அந்த முறையில் உயர்கல்வி வழங்கப்படுவதில்லை.

கல்விச் செயற்பாடுகளை தொடர மாணவர்களுக்கு சலுகை கடன் வழங்கப்படுகிறது. அதனால் விரும்பிய பல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பு மாணவருக்கு கிடைக்கிறது. எமது நாட்டில் அந்தத் தெரிவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவே செய்கிறது. அதனால் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதேபோல் பணம் இல்லாதன் காரணத்தால் எந்தவொரு மாணவருக்கும் உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போகக்கூடாது.

இந்நாட்டில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். தற்போதுள்ள பல்கலைக்கழகங்களின் தரத்தையும் மேம்படுத்த வேண்டும். பல்கலைக்கழகங்களுக்கு அவசியமான வசதிகளை வழங்கி அதன் பலன்களை 05 வருடங்களில் அடையவேண்டும். அதன்போது மாணவர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்கும். அதேபோல் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்திற்கு இணையான 03 தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கிறோம்.

அதேபோல் அரச சார்பற்ற நிறுவனங்களை ஆரம்பிக்கவும் நாம் அனுமதி வழங்குவோம். தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில மாணவர்களுக்கு சலுகைக் கடன்கள் வழங்கப்படும். எனவே காணிகளை விற்பனை செய்துவிட்டு வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. நாட்டின் பல்கலைக்கழகங்கள் அதிகரிக்கும் பட்சத்தில் வெளிநாட்டு மாணவர்களின் வருகையும் அதிகரிக்கும்-என்றார். (அ)

## மாலைதீவு....

ஸ்திரத்தன்மையற்ற சூழல் இருந்து நெருக்கடி நிலை அமுல்படுத்தப்பட்ட மாலைதீவில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் மிகவும் கவனிக்கப்பட்டது.

மாலைதீவில் முன்னேற்றக்கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி அப்துல்லா யாமீன், எதிர்க்கட்சியான மாலைத்தீவு ஜனநாயக கட்சி வேட்பாளர் இப்ராகிம் முஹமது ஷோலியிடம் தோல்வியடைந்தார்.

இதனால், இப்ராகிம் முஹமது ஷோலி மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக தெரிவானதுடன் இன்று அவர் பதவியேற்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவர் மாலைதீவு புறப்பட்டுச் சென்றுள்ளார். (அ)

## 74 பாடசாலை....

காணப்பட்டு அவை அகற்றப்பட்டு புதிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

தமது பாடசாலைகளில் பாழடைந்த கட்டடங்கள் காணப்பட்டால் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறும், அவ்வாறான கட்டடங்களில் இருந்து மாணவர்களை வெளியேற்றி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## வடக்கு....

தெரிவிக்கையில்-

“வடக்கில் 7000 இற்கும் மேற்பட்டோர் உயர்தர பரீட்சை யுடன் கல்வியை இடைநிறுத்தியுள்ள னர்.

அவ்வாறு உங்கள் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தாது, சாதாரண தர சித்தி, உயர்தர சித்தி பெற்று பல்கலைக்கழகம் போக முடியாவிட்டாலும் அந்த கனவினை நீங்கள் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் ஊடாக பெற்றுகொள்ளலாம் - என்றார். (அ)

## சீன விசேட....

மொஹமட் முய்ஸூவின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக மாலைதீவுக்கு செல்ல வுள்ள ஷென்யிகின், மாலைதீவு விஜயத்தை தொடர்ந்து இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அரசாங்கத்தின் உயர் மட்ட உறுப்பினர்களுடன் விசேட சந்திப்புகளையும் நடத்த உள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், இதன்போது இருநாட்டு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடல்களையும் நடத்தியிருந்தார்.

ஷென் யிகினியின் விஜயத்தில், சீனாவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் எட்டப்பட்ட சில உடன்பாடுகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வுசெய்யப்படும். (அ)

## மாகாண....

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அல்லது மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் அன்றி, மாகாண சபைகளினால் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டால், அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

13 ஆவது திருத்தச்சட்டத்தில் கல்விக்கான அதிகாரம் கூறப்பட் டுள்ளதே ஒழிய, பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவேண்டும் என்று கூறப்படவில்லை.

அப்படி நேர்ந்தால், கிழக்கு மாகாணத்தில் மத்திய கிழக்கு நாடுகளின் அனுசரனையுடன் வஹாபி பல்க லைக் கழகங்கள் அல்லது ஷரீஆ சட்டத்தை கற்பிக்கும் பல்கலைக் கழகங்களை ஸ்தாபிக்க முடியுமாக இருக்கும்.

அதேபோல், கனடாவின் ஒன்ராரியோ பிராந்திய பாடசாலைகளில், இலங்கையில் தமிழ் இனப்படுகொலை இடம்பெற்றதாக கற்பிக்கப்படுவது போன்று, வடக்கில் ஆரம்பிக்கப்படும் தனியார் பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் மனங்களை மாற்றும் இவ்வாறான பாடத்திட்டங்கள் உள்வாங்கப்பட்டுவிடும்.

பல்கலைக்கழகங்கள் நாட்டை முன்னேற்றும் வகையிலும், நாட்டுக் கான புத்திஜீவி சமூகத்தை உருவாக்கும் வகையிலேயே இருக்க வேண்டுமே ஒழிய, அரசியல் நோக்கத்திற்காகவோ ஆளுநர் அல்லது முதல்வர்களின் தேவைக்காகவோ ஸ்தாபிக்கப்படக் கூடாது - என்றார். (அ)

## 100மருந்து....

நாட்டில் அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் மூன்று மடங்கிலிருந்து ஆறு மடங்கு வரை அதிகரித்து காணப்படுகிறது.

சில மருந்துகளின் விலை 600 ரூபாவால் அதிகரித்துள்ளது. அந்த வகையில் மருந்துகளின் விலை அதிகரிப்பையாவது கட்டுப்படுத்த முடியாதா? அதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சர் மேற்கொள்ள முடியாதா? என அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சுகாதார அமைசசர் ரமேஷ் பத்திரண,

தற்போதும் நாட்டில் விலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள 100 மருந்து வகைகள் காணப்படுகின்றன. சந்தையில் காணப்படும் என்டீ டயபடிக், என்டீ ஹைப டென்ஸ்,கார்டியோலோஜிகள்ஸ் உள் ளிட்ட 50 வகை மருந்தும் அதற்குள் உள்ளடங்குகின்றன. , அவை அனைத் தும் பிரதான மருந்து வகைகள் பட்டியலைச் சேர்ந்தவை.

அவைகளுக்கு விலைக் கட்டுப்பாடு மேற்கொண்டுள்ளதுடன் அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்வது அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகார சபையாகும். அதற்கே விலைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் உள்ளது.

எதிர்காலத்தில் மேலும் 100 மருந்துகளுக்காகவாவது விலைக் கட்டுப்பாட்டை கொண்டு வருவதே எமது எதிர்பார்ப்பு. அதற்காக மேற்படி விலைகள் தொடர்பான குழு சம்பந்தப்பட்ட அதிகார சபைக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கான தலைவரும் அண்மையிலேயே நியமிக்கப்பட்டுள்ளார். அந்த தலைவருடன் கலந்து ரையாடி அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அவ்வாறு 100 மருந்துகளுக்கு விலைக் கட்டுப்பாட்டு ஏற்படுத்தி அதனை வர்த்தமானியில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக ஒரே மருந்துக்கு வர்த்தக பெயர்கள் சுமார் 10 வரை காணப்படுகின்றன. அது தொடர்பில் குறித்த அதிகார சபைக்கு ஒரு முறைமை காணப்படுகிறது. சாதாரண விலை முறைமையை ஒழுங்குபடுத்தி விலைக் குழுவில் காணப்படும் நிபுணர்கள், மருந்துகள் தொடர்பான நிபுணர்கள், பொருளாதாரத் துறை நிபுணர்கள் அனைவரதும் கண்காணிப்பில் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (அ)

## யாழில்....

உணவு கையாளும் நிலையங்களையும் சீல் வைத்து மூடுமாறு பொதுச் சுகாதார பரிசோதகருக்கு கட்டளையிட்டார்.

அத்துடன் வழக்குகளை மேலதிக விசாரணைகளுக்காக டிசெம்பர் மாதத்திற்கு ஒத்திவைத்தார்.

இதனைத்தொடர்ந்து 04 உணவு கையாளும் நிலையங்களும் பொதுச் சுகாதார பரிசோதகர் தி. கிருபனால் சீல் வைத்து மூடப்பட்டன. (அ)

## ஈஸ்டர்...

நேரம் சுமார் 500 பேர் காயமடைந்தனர்.

தேசிய பாதுகாப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்தி ஆட்சியை பிடிக்கும் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்களை உளவுத்துறை உயர் அதிகாரி ஒருவர் சந்தித்தார் என அசாத் மௌலானா சனல் 4 க்கு தெரிவித்த கருத்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணை தடம் புரண்டமைக்கு அரசியல் தலையீடே காரணம் என முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன அவுஸ்ரேலியாவின் ஏ.பி.சி ஊடகத்திற்கு அம்பலப்படுத்தியுள்ளார்.

குண்டுவெடிப்பு நடந்து 6 மாதங்களுக்குப் பிறகு ராஜபக்ஷ பதவியேற்றதும் அவரது தரப்பினர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அந்த நேரத்தில், ஒரு பிரதமரோ அல்லது அமைச்சரவைகூட நியமிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து வந்த மாதங்களில், மேலும் 22 அதிகாரிகள் விசாரணையில் இருந்து நீக்கப்பட்டனர் என்றும் தனது கட்டளையின் கீழ் இருந்த 700 இற்கும் மேற்பட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் அரசாங்கம் விதித்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சியின் சகாக்களை விசாரிக்கும் பொலிஸாரை அச்சுறுத்தும் முயற்சியாக இதனை தான் பார்த்ததாகவும், இது மிகவும் சட்டவிரோதமானது என்றும் இந்த நடவடிக்கையால், பல அதிகாரிகள் அச்சப்பட்டதாகவும் சிலர் இனி அங்கு பணிபுரிய விரும்பாமால் இடமாற்றம் கோரியதாகவும் அவர் கூறியுள்ளார்.

சில உளவுத்துறை அதிகாரிகள் முஸ்லிம் குழுவுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்றும் அதனைக் கண்டு பிடித்தபோது அவர்களுக்கு தடை போடப்பட்டது என்றும் இவற்றில் ஒன்று அமெரிக்க பெடரல் பீரோ ஒப் இன்வெஸ்டிகேஷன் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் ரவி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடந்த அன்று காலை தற்கொலை குண்டுதாரி ஒருவரின் வீட்டுக்கு இராணுவ புலனாய்வு அதிகாரிகள் சென்றதாகவும் ஆனால் இந்த தகவலை பொலிஸாரிடம் பகிர்ந்து கொள்ளவில்லை என்றும் ரவி செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய சந்தர்ப்பங்களில், சில தனிநபர்கள் மற்றும் குழுக்களை கேள்வி கேட்க முயன்றபோது, சில தடைகளை தாம் எதிர்கொண்டதாகவும் தற்கொலை குண்டுதாரிகளின் சகாக்களை விசாரணை செய்வதற்கு தாம் இரண்டு முறை தடுக்கப்பட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர், கிழக்கில் இரண்டு கான்ஸ்டபிள்களின் கொலையில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் பங்கை மறைத்து, இராணுவ புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருக்கு தவறான தகவல்களை வழங்கியிருந்தனர் என்றும் ரவி செனவிரத்ன கூறியுள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# நாட்டுக்கு அரசியல் தீர்வு பயனற்றது பொருளாதாரத் தீர்வே மிக அவசியம்!

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் பந்துல

**கொழும்பு, நவம்பர் 17**

**நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள, அரசியல் தீர்வுகள் பயனற்றவை, பொருளாதாரத் தீர்வுகளே அவசியம் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரலாற்று சிறப்பு மிக்க, ரெடிகல் மற்றும் புரட்சியான ஒரு வரவு செலவுத்திட்டத்தையே இம்முறை சமர்ப் பித்துள்ளார். இது வங்குரோத்து அடைந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவித்த ஒரு நாட்டின் வரவு செலவுத் திட்டமாகும்.

வேறு எந்தவொரு நிதி அமைச்சரும் வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்கும்போது இவ்வாறானதொரு நிலைமை நாட்டில் இருக்கவில்லை.

இந்நாடு, பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு தர்க்க ரீதியிலான பிரதான இரண்டு காரணங்களே உள்ளன.

முதலாவது, அரச வரவு - செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை. இரண்டாவது, சர்வதேச கொடுப்பனவுக் கையிருப்பின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஆகியவை ஆகும்.

நாட்டின் அன்றாட செயற்பாடுகளுக்காக அரசாங்கம் மேற்கொள் ளும் நிர்வாகச் செலவுகளுக்கு போதுமான அளவு நிதி இல்லாமை மற்றும் இறக்குமதிகளுக்கு ஏற்ப ஏற்றுமதி வருமானம் இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்தப் பற்றாக்குறைகள் ஏற்படுகின்றன.

கடந்த காலங்களில் அனைத்து அரசாங்கங்களும் பின்வரும் மூன்று பிரதான வழிமுறைகளின் ஊடாக இந்தப் பற்றாக்குறைகளை ஈடுசெய்துள்ளன.

முதலாவது, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடன்களைப் பெற்றுக்கொள்ளல். இரண்டாவது, அரச சொத்துக்களை விற்பனை செய்தல். மூன்றாவது, இவை இரண்டும் போதுமானதாக இல்லாத விடத்து பணத்தை அச்சிடுதல் ஆகும். அரச நிதி தொடர்பான அனைத்து முகாமைத்துவ அதி காரமும் பாராளுமன்றத்திற்கே உள்ளது.

இவ்வாறு பற்றாக்குறை தொடர்ந்தும் ஏற்பட்டு, நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லாமல் இருப்பதற்காக கடந்த காலங்களில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன.

துரதிஷ்டவசமாக அண்மைய வருடங்களில் இந்த சட்டங்களுக் கேற்ப செயற்படாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

நிதி முகாமைத்துவம் தொடர் பில், அன்று ஆட்சியில் இருந்த அரசாங்கம் தோல்வி கண்ட தையடுத்தே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்று, இந்த நெருக்கடியைத் தீர்க்க முன்வந்தார்.

இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இதற்குப் பொருத்தமான தீர்மான மாக கடன் மறுசீரமைப்பு மூலம் தீர்வைப் பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டார்.

இவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருக்க, பின்வரும் நான்கு முக்கிய நோக்கங்களைக் கருத்திற்கொண்டு 2024 வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இயலுமான அளவு அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல், அரசாங்கத்தின் மூலதனச் செலவுகள் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறைத்தல், ஏற்றுமதி மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணியை அதிகரித்தல், இறக்குமதிக்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணியைக் குறைத்தல் ஆகிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதன் ஊடாக சர்வதேச கொடுப்பனவுகளில் நடைமுறைக் கணக்கு மேலதிகக் கையிருப்பு மீதி யைப் பேணுவதன் மூலம் அதில் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

2024 வரவு - செலவுத்திட்டம் மூலம் அதிகரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ள அரச ஊழியர்களின் சம்பளம், அரசாங்கத்தின் பிரதான வருமான மூலமான அரச வரி வருமானத்தில் இருந்துதான் வழங்க வேண்டும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

வரவு - செலவுத் திட்டத்திற்குப் பிறகு, சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடன் கிடைக்கவுள்ளது.

கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் வரவு - செலவுத் திட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் செயல்படுத்த போதுமான நிதி எமக்கு கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (அ)

# புனேயில் இலங்கை - இந்தியா கூட்டாக இராணுவப் பயிற்சி



கொழும்பு, நவ. 17

இலங்கை இராணுவம் மற்றும் இந்திய இராணுவம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'மித்ர சக்தி' இராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள 29 அதிகாரிகள் மற்றும் 94 சிப்பாய்கள் கொண்ட குழு நேற்று முன் தினம் பிற்பகல் இந்தியா சென்றுள்ளது.

இந்தியாவின் புனேவில் உள்ள இந்திய இராணுவத்தின் 330ஆவது காலாட் பிரிகேட்டில் 'மித்ர சக்தி' பயிற்சி நேற்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறும்.

'மித்ர சக்தி' கூட்டு இராணுவப் பயிற்சி இயங்கு தன்மை, இராணுவ ஒத்துழைப்பு, கூட்டு தந்திரோபாய நடவடிக்கைகள், நாடுகடந்த இராணுவப் பிரச்னைகளைப் புரிந்துகொள்வது, அனுபவங்களைப் பகிர்தல் போன்றவற்றை உள்ளடக்கியது. இது 2012 ஆம் ஆண்டிலிருந்து இரு இராணுவ நிறுவனங்களுக்கிடையில் நடைபெற்று வரும் வருடாந்த பயிற்சித் திட்டமாகும்.

ஒன்பதாவது கூட்டு பயிற்சியான இப் பயிற்சியில் குறிப்பாக கிளர்ச்சி எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு, ஆயுதப் பயிற்சி, அடிப்படை இராணுவ யுக்திகள் மற்றும் கடினமான போர் உத்திகள் மற்றும் செயல்பாடுகளை நடத்துவதற்கான நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் கூட்டு உத்திகளை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. (அ)

# தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களை கடத்துவோருக்கு அதிகபட்ச தண்டனை

## சுங்கத் திணைக்களம் தீர்மானம்

கொழும்பு, நவ. 17

தங்கம் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் உட்பட தடை செய்யப்பட்ட பொருட்களை கடத்துபவர்களுக்கு அதிகபட்ச தண்டனைகளை விதிக்க இலங்கை சுங்கத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, 100 கிராமுக்கு மேல் தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகள் உட்பட கணிசமான அளவு தடை செய்யப்பட்ட பொருட்களை கடத்துபவர்களுக்கு அதிகபட்ச அபராதம் விதிக்கப்படும் என திணைக்களத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அதிகரித்து வரும் வருவாய் இழப்பை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுங்கத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளில் தங்கம், கையடக்கத் தொலைப்பேசிகள் மற்றும் பிற பெறுமதியான பொருட்களின் கடத்தல்கள் அதிகரித்ததாக இக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் தடை செய்யப்பட்ட பெறுமதிமிக்க பொருட்களை கொண்டு வரும் நபர்கள் கைது செய்யப்பட்டால், குறித்த பொருட்களின் மதிப்பை விட மூன்று மடைந்து அபராதம் அல்லது 1,00,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், கடந்த வருடம் 760 பில்லியன் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதுடன் , வருடத்துக்கான மொத்த சுங்க வருவாய் 925 பில்லியன் ரூபாய் எனவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ரஞ்சித் பண்டார தலைமையில் கிரிக்கெட் மோசடிகள் குறித்து ஆராயத் தயாரில்லை

கொழும்பு, நவ. 17

கிரிக்கெட் நிறுவன ஊழல்கள் தொடர்பில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவர் ரஞ்சித் பண்டாரவுடன் கலந்துரையாடுவதற்கு தாம் தயாரில்லை என தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவரின் மகன் எவ்வாறு கோப் குழுவில் அமரமுடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து கோப் குழுவின் உறுப்பினர் என்றவகையில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

கிரிக்கெட் நிறுவன ஊழல்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கோப் குழுவின் உறுப்பினர்கள் என்ற ரீதியில் தயாராக இருக்கின்றபோதும், பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் கலந்துரையாடுவதற்கு தயார் இல்லை என தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக சபாநாயகர் தெரிவித்தார். (அ)

# ஆறு கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள் சிக்கியது!

கொழும்பு, நவ. 17

கனடாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் இருந்து ஒரு தொகை குஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 25ஆம் திகதி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கொள்கலன் மீது சந்தேகத்தின் பேரில் சுங்க வருவாய் கண்காணிப்புப் பிரிவினர் இதனைக் கைப்பற்றியிருந்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அங்கு 6 கிலோ குஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பங்குகளின் பெறுமதி சுமார் 6 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த போதைப் பொருள் கனடாவில் இருந்து கணேமுல்ல பிரதேசத்திலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், இந்த பொதியின் உரிமையாளர் சார்பாக வந்த முகவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# மருந்து மோசடியால் பெருந்தொகை பணம் வீண் விரயமாக்கப்படுகிறது!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, நவ. 17

மருந்துகளை இறக்குமதி செய்வதில் இடம்பெறும் முறைகேடு மற்றும் ஊழல் காரணமாக ஆண்டுதோறும் பெருந்தொகை பணம் வீண் விரயமாக்கப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக இவ்வாறான ஊழல் நடவடிக்கைகளினால் வருடாந்தம் முப்பது முதல் நாற்பது பில்லியன் ரூபா வீண் விரயமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த வருடம் மருந்து இறக்குமதிக்காக 180 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், உரிய முறைமைக்கு அமைவாக மருந்துகளை இறக்குமதி செய்தன் மூலம், பெருந்தொகை பணம் வீண்விரயம் ஆக்கப்படாது எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# விளையாட்டு அமைச்சரிடம் ரூ.2.4 பில்லியன் நட்டஈடு கோருகிறது கிரிக்கெட் நிர்வாகம்!




விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் கருத்துக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

நற்பெயரை சேதப்படுத்தும் அமைச்சரின் அவதூறு கருத்துகளுக்கு பதிலடி கொடுப்பதன் மூலம் தனது நற்பெயரையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க தீர்க்கமான நடவடிக்கை எடுத்துள்ளதாக கிரிக்கெட் அமைப்பு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனவே இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சார்பில் 2.4 பில்லியன் ரூபா நட்டஈடு வழங்கக் கோரி கடந்த (13ஆம் திகதி) இலங்கை கிரிக்கெட் தலைவர், உப தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் இணைந்து கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தனர்.

விளையாட்டுத்துறை அமைச்சரின் தொடர்ச்சியான பொய்யான மற்றும் தீங்கு விளைவிக்கும் அறிக்கைகளை பரப்புவது இலங்கை கிரிக்கெட்டின் நன்மதிப்பை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் கணிசமான அளவில் சேதப்படுத்தியுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உயர்மட்டத் தலைமையானது அதன் அனைத்து முயற்சிகளிலும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நியாயமான ஆட்டத்தை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாக தொடர்புடைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளையாட்டு அமைச்சரினால் இலங்கை கிரிக்கெட்டிற்க்கு ஏற்பட்டுள்ள தேவையற்ற பாதிப்பை சரிசெய்வதே இந்த சட்ட நடவடிக்கையின் நோக்கமாகும்.

கிரிக்கெட் நிறுவனம் மற்றும் அதன் உறுப்பினர்களின் நற்பெயரைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை அவசியம் என இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழு நம்புவதாகவும் அவர்கள் தமது அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வீரர்கள், அதிகாரிகள் மற்றும் விளையாட்டு ரசிகர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவதன் மூலம் விளையாட்டின் உயிர்ச்சக்தியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதாக கிரிக்கெட் நிறுவனம் தனது அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

விளையாட்டு அமைச்சருக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள், அதன் அமைப்பின் கொள்கைகளைப் பாதுகாப்பதற்கும், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளில் இருந்து அதன் பங்குதாரர்களைப் பாதுகாப்பதற்கும் அர்ப்பணிப்புடன் இருப்பதை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக கிரிக்கெட் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த சட்ட நடவடிக்கைகளின் ஊடாக இலங்கை கிரிக்கெட் விளையாட்டு மற்றும் அதன் ஆதரவாளர்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சச்சினின் சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை படைத்த கோலி




ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சதம் அடித்த வீரர் என்ற சாதனையை விராட் கோலி படைத்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்காரின் சாதனை முறியடித்தே இந்த சாதனையை விராட் கோலி படைத்துள்ளார்.

463 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருந்த சச்சின் டெண்டுல்கார் 49 சதங்களை பெற்றிருந்த நிலையில், நியூசிலாந்துக்கு எதிரான இன்றைய போட்டியில் 50ஆவது சதத்தை அடித்ததன் மூலம் விராட் கோலி 290ஆவது ஒருநாள் போட்டியிலேயே இந்த சாதனையை முறியடித்துள்ளார்.

ஒருநாள் உலகக் கிண்ண தொடரின் ஒரு சீசனில் அதிக ஓட்டங்களை விளாசிய சச்சின் டெண்டுல்கரின் சாதனையை விராட் கோலி முறியடித்துள்ளார். சச்சின் 673 ஓட்டங்களை எடுத்திருந்தார். இதனை கோலி முறியடித்துள்ளார்.

நடைபெற்றுவரும் உலகக் கிண்ண தொடரில் 10 போட்டிகளில் விளையாடியுள்ள விராட் கோலி 709 ஓட்டங்களை பெற்றுள்ளார். இதில் 3 சதங்களும் 5 அரை சதங்களும் அடங்கும்.

இன்றைய போட்டியில் அவர் 117 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அத்துடன், ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர்களில் ரிக்கி பாண்டிங்கை முந்தினார் விராட் கோலி. அந்த பட்டியலில் விராட் கோலி 3 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

18426 - சச்சின்
14234 - சங்ககாரா
13705* - விராட் கோலி
13704 - ரிக்கி பாண்டிங்
13430 - ஜெயசூர்யா

சர்வதேச கிரிக்கெட்டில் அதிக அரைசதம் விளாசிய வீரர்கள் பட்டியலில் சங்ககாராவை முந்தினார் விராட் கோலி. 5ஆவது இடத்தில் இருந்து 4ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

## அமெரிக்கன் பிரீமியர் லீக்கில் இணையும் அஞ்சலோ மத்தியூஸ்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் அமெரிக்கன் பிரீமியர் லீக் போட்டிகளில் விளையாடுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்தப் போட்டியில் விளையாட மற்றுமொரு இலங்கை கிரிக்கெட் வீரரான பானுக ராஜபக்ஷவும் இணைந்துள்ளார்.

அமெரிக்காவில் நடைபெறும் மிகப்பெரிய லீக் கிரிக்கெட் போட்டியாக அமெரிக்கன் பிரீமியர் லீக் உள்ளது.

7 அணிகள் பங்கேற்கும் இந்த போட்டி கடந்த 13ஆம் திகதி ஆரம்பமானதுடன், எதிர்வரும் 22ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நடைபெற்றுவரும் உலகக் கிண்ண தொடரில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியொன்றில் டைம் அவுட் முறையில் ஆட்டமிழந்த முதல் வீரராக அஞ்சலோ மத்தியூஸ் பதிவாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## தலைவர் பதவியிலிருந்து விலகும் பாபர் அசாம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக பாபர் அசாம் அறிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தான் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து விலகினாலும் மூன்று வடிவ போட்டிகளிலும் தொடர்ந்தும் விளையாடுவதாக பாபர் அசாம் தனது எக்ஸ் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



## உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியா

நியூசிலாந்தை 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 2023 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி உலகக் கிண்ண தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியா அணி தகுதி பெற்றுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் முதல் அரையிறுதி போட்டியில் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையே மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 04 விக்கெட் இழப்புக்கு 397 ஓட்டங்களைப் பெற்றது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய விராட் கோலி 117 ஓட்டங்களையும் ஸ்ரேயாஸ் ஐயர் 105 ஓட்டங்களையும் சுப்மன் கில் 80 ஓட்டங்களையும் பெற்று அணிக்கு பங்களித்தனர். பந்துவீச்சில் டிம் சவுத்தி 03 விக்கெட்டுகளையும், டிரென்ட் போல்ட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அதன்படி, 398 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு களம் இறங்கிய நியூசிலாந்து அணியால் 48 ஓவர்கள் 5 பந்துகளில் 327 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க முடிந்தது. அதன்படி இந்திய அணி 70 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து அணி சார்பில் டெரில் மிட்செல் 134 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 69 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொஹமட் ஷமி 7 விக்கெட்டுக்களையும், ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ், குல்தீப் யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



## ஏ.டி.பி. பைனல்ஸ் தொடரின் அரையிறுதிக்கு டானியல்!

அலெக்சாண்டர் ஸ்வெரேவை வீழ்த்தி மூன்றாவது முறையாக ஏ.டி.பி. பைனல்ஸ் தொடரின் அரையிறுதி போட்டிக்கு டானியல் மெட்வடேவ் தகுதி பெற்றுள்ளார்.

உலக ரென்னிஸ் தர வரிசையில் முதல் 8 இடங்களில் இருக்கும் வீரர்கள் பங்கேற்ற ஏடிபி பைனல்ஸ் தொடர் இத்தாலியின் டுரினில் நடைபெற்று வருகின்றது.

அதன்படி நேற்று இடம்பெற்ற ரெட் குரூப் ஒற்றையர் பிரிவு போட்டியில் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் மற்றும் டானியல் மெட்வடேவ் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

அலெக்சாண்டர் ஸ்வெரேர் கடும் நெருக்கடி கொடுத்தபோதும் டை பிரேக் வரை நீடித்த முதல் செட்டை 7-6 என டானியல் மெட்வடேவ் கைப்பாற்றினார்.

இதனை தொடர்ந்து இடம்பெற்ற அடுத்த செட்டில் எவ்வித அழுத்தங்களையும் எதிர்கொள்ளதாக டானியல் மெட்வடேவ் 6-4 என செட்டை கைப்பற்றி வெற்றிபெற்றார்.

முன்னதாக நடைபெற்ற போட்டியில் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், கார்லோஸ் அல்கராஸை வீழ்த்தி ஒரு வெற்றியையும் டானியல் மெட்வெடேவ் நேர் செட்களில் அண்ட்ரே ரூப்லெவை வீழ்த்தி இருந்தனர்.

இந்நிலையில் இன்று இடம்பெறவுள்ள போட்டியில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸை ரஷ்ய வீரர் டானியல் மெட்வடேவ் எதிர்கொள்ளவுள்ளார்.

# அமெரிக்கா - ஈரான் இடையே பிளவுபட்டு நிற்கும் மத்திய கிழக்கு நாடுகள்!

ஜெரமி பவன்



# மேலும் போர் வெடிக்கும் அபாயம்

இந்த காஸா போர் மற்ற எல்லா போர்களையும் போலவே இருந்திருந்தால், போர் நிறுத்தம் இப்போது நடைமுறையில் இருந்திருக்கும்.

இறந்தவர்கள் புதைக்கப்பட்டிருப்பார்கள் மற்றும் இஸ்ரேல் ஐக்கிய நாடுகள் சபையுடன் மறு கட்டமைப்புக்காக காஸாவுக்குள் எவ்வளவு சிமென்ட் கொண்டு வர முடியும் என்று வாதிட்டுக் கொண்டிருக்கும்.

ஆனால் இந்தப் போர் அப்படியல்ல. முதலில் அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் நடத்திய கொடூர தாக்குதலில் உயிரிழந்த மக்களில் பெரும்பாலானோர் இஸ்ரேலிய குடிமக்கள்.

அதைத் தொடர்ந்து, இஸ்ரேலின் “வலிமையான பழிவாங்குதல்” என்று அதன் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறிய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பாலத்தீனிய குடிமக்கள். ஆனால், இந்தப் போர் மற்ற போர்களில் இருந்து வேறுபட்டது எனக் கூறுவதற்கு இந்தக் கொடூர கொலைகள் காரணமல்ல.

மத்திய கிழக்கைப் பிளவுபடுத்தும் சம்பவங்கள் அரங்கேறி வரும் நேரத்தில் இது நிகழ்வதால், இந்தப் போர் மற்றவற்றிலிருந்து வேறுபட்டது. குறைந்தது இருபது ஆண்டுகளாக, இப்பிராந்தியத்தின் பிளவுபட்ட புவிசார் அரசியல் நிலப்பரப்பில் ஈரானின் நண்பர்கள் மற்றும் நட்பு நாடுகளுக்கும், அமெரிக்காவின் நண்பர்கள் மற்றும் நட்பு நாடுகளுக்கும் இடையே மிகக் கடுமையான பிளவு ஏற்பட்டுள்ளது.

ஈரானின் வலுவான நெட்வொர்க், லெபனானில் உள்ள ஹெஸ்புலா, சிரியாவில் அசாத் ஆட்சி, யேமனில் உள்ள ஹூதிகள் மற்றும் ஈரானால் ஆயுதம் வழங்கப்பட்டு மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட பல்வேறு ஈராக்கிய போராளிகளால் ஆனது. ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் போன்ற அமைப்புகளுக்கும் ஈரானியர்கள் ஆதரவு அளித்துள்ளனர். சில நேரங்களில் “எதிர்ப்பின் அச்சு” என்று அழைக்கப்படுவது இதுவே.

ஈரான், ரஷ்யா மற்றும் சீனாவுடன் நெருங்கி வருகிறது. யுக்ரேனில் ரஷ்யாவின் போர் முயற்சியில் ஈரான் குறிப்பிடத்தக்க சக்தியாக மாறியுள்ளது. சீனா ஈரானின் கச்சா எண்ணெய்யை அதிக அளவில் வாங்குகிறது.

காஸாவில் போர் நீண்டுகொண்டே செல்கிறது. பாலத்தீனிய குடிமக்களை இஸ்ரேல் கொன்று பல்லாயிரக்கணக்கான வீடுகளை அழித்து வருகிறது. இதனால், அந்த இரு முகாம்களில் இருப்பவர்களும் இந்த மோதலில் தலையிடும் அபாயம் உள்ளது.



### இஸ்ரேலுக்கு தொடரும் அமெரிக்காவின் வலுவான ஆதரவு

இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையிலான எல்லை மெதுவாகவும் சீராகவும் சூடுபிடித்து வருகிறது. இஸ்ரேலோ அல்லது ஹெஸ்புலாவோ முழு வீச்சிலான போரை விரும்பவில்லை. ஆனால் அவர்கள் இப்போதே கடுமையாக மோதிக் கொண்டிருப்பதால் நிலைமை அவர்கள் கட்டுப்பாட்டில் இருக்காது.

யேமனில் உள்ள ஹூதிகள் இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை ஏவி வருகின்றனர். அவை அனைத்தும், இதுவரை இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அல்லது செங்கடலில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் அமெரிக்க கடற்படை போர்க் கப்பல்கள் மூலம் தவிர்க்கப்பட்டுள்ளன.

ஈராக்கில், ஈரானால் ஆதரிக்கப்படும் போராளிகள் அமெரிக்க தளங்களைத் தாக்கியுள்ளனர். சிரியாவில் உள்ள சில தளங்களில் அமெரிக்கா பதிலடி கொடுத்தது. மீண்டும், அனைத்து தரப்பினரும் மோதலைக் கட்டுப்படுத்த முயல்கின்றனர், ஆனால் ராணுவ நடவடிக்கையின்



தீவிரத்தைக் கட்டுப்படுத்துவது எப்போதும் கடினம்.

அமெரிக்காவின் பக்கத்தில் இஸ்ரேல், வளைகுடா எண்ணெய் நாடுகள், ஜோர்டான் மற்றும் எகிப்து உள்ளன. பல பாலத்தீன பொதுமக்கள் கொல்லப்படுவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

பல பாலத்தீன குடிமக்களை இஸ்ரேல் கொல்வது குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு தர்மசங்கடமாக இருப்பது தெளிவாகத் தெரிந்தாலும், இஸ்ரேலுக்கு அமெரிக்கா தொடர்ந்து வலுவான ஆதரவை அளித்து வருகிறது.

### அல் நக்பா பேரழிவு

அமெரிக்காவின் அரேபிய நட்பு நாடுகள் அனைத்தும் இஸ்ரேல் செய்வதைக் கண்டித்து போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. லட்சக்கணக்கான பாலத்தீனியர்கள் வடக்கு காஸாவில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி, தெற்கு நோக்கி சாலைகளில் நடந்து செல்லும் காட்சி, 1948இல் நடந்த சுதந்திரப் போரில் அரேபியர்களுக்கு எதிரான இஸ்ரேல் வெற்றியின் பயங்கரமான நினைவுகளை கண் முன்னே நிறுத்துகிறது.

ஏழு லட்சத்துக்கும் மேற்பட்ட பாலத்தீனியர்கள் இஸ்ரேலியர்களால் துப்பாக்கி முனையில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர். இதுவே பாலத்தீனியர்களால் அல் நக்பா - பேரழிவு என்று குறிப்பிடப்படுகிறது. 1948 அகதிகளின் சந்ததியினரே காஸா பகுதியின் பெரும்பாலான இன்றைய மக்கள் ஆவர்.

பாலத்தீனியர்கள் மீது மற்றொரு நக்பாவை நடத்துவது பற்றி பெஞ்சமின் நெதன்யாகுவின் அரசாங்கத்தை ஆதரிக்கும் தீவிர யூத தேசியவாதிகள் சிலரின் ஆபத்தான பேச்சு அமெரிக்காவின் முகாமில் உள்ள அரபு நாடுகளை, குறிப்பாக ஜோர்டான் மற்றும் எகிப்தை அச்சுறுத்துகிறது.

நெதன்யாகுவின் அரசாங்கத்தில் உள்ள ஒரு அமைச்சர், ஹமாஸை சமாளிக்க காஸா மீது அணுகுண்டு வீசுவது பற்றிப் பேசியிருந்தார். அவர் கண்டிக்கப்பட்டார், ஆனால் பணிநீக்கம் செய்யப்படவில்லை.

### போரின் பின்விளைவுகளை எப்படிக் கையாள்வது?

இவை அனைத்தும் வெறித்தனமான சிறு குழுவினரின் ஆவேசங்கள் என்று நிராகரிக்கப்படலாம். ஆனால் ஜோர்டான் மற்றும் எகிப்தில் இது தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இஸ்ரேலிடம் நிறைய அறிவிக்கப்படாத ஆயுதங்கள் உள்ளன. இருப்பினும் கவலை அதுவல்ல. ஆயிரக்கணக்கான பாலத்தீனியர்கள் தங்கள் எல்லைகளுக்குள் வலுகட்டாயமாக நுழைவார்கள் என்பதுதான்.

காஸாவில் நடக்கும் போரைப் பொறுத்தவரை, இஸ்ரேலின் உறுதியான நட்பு நாடுகளைச் சேர்ந்த மூத்த மேற்கத்திய தூதர்கள், போரை முடிப்பதும் அதன் பின்விளைவுகளைக் கையாள்வதும் “கடினமானதாக, குழப்பமானதாக இருக்கும்” என்று கூறினர்.

“பாலத்தீனியர்களுக்கான அரசியல் தளத்தை மீண்டும் உருவாக்குவதே ஒரே வழி” என்று ஒருவர் கூறினார். அவர், இஸ்ரேலுடன் சேர்த்து சுதந்திரமான பாலத்தீனமும் இருப்பதைக் குறிப்பிடுகிறார். ஒரு கோஷமாக மட்டுமே நிலைத்து நிற்கும் ஒரு தோல்வியுற்ற யோசனையான “இரு-நாடு தீர்வு’ எனக் குறிப்பிடப்படுவது இதுவே.

இஸ்ரேல் மற்றும் அரேபியர்களுக்கு இடையே இப்படி ஒரு தீர்வு புத்துயிர் பெறுவது ஒரு லட்சிய திட்டம், மேலும் இதுவொரு சிறந்த யோசனையாக இருக்கலாம். ஆனால் வலி, எச்சரிக்கை மற்றும் வெறுப்பு ஆகியவற்றின் தற்போதைய சூழலில் அது சாத்தியமாவது மிகவும் கடினமாக இருக்கும்.

பாலத்தீனியர்கள் மற்றும் இஸ்ரேலியர்களின் தற்போதைய தலைமைகளின் கீழ் இது நடக்காது.

காஸாவில் போர் முடிந்த பிறகு என்ன திட்டம் என்பதை பிரதமர் நெதன்யாகு இன்னும் தெரிவிக்கவில்லை. பாலத்தீனிய அதிகாரத்தின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் தலைமையிலான அரசாங்கத்தை நிறுவும் அமெரிக்காவின் யோசனையை அவர் நிராகரித்தார்.

### எதிர்காலத்தில் பல போர்கள் ஏற்படும் அபாயம்

பெஞ்சமின் நெதன்யாகு தனது அரசியல் வாழ்நாள் முழுவதும் எதிர்த்த இரு நாடு தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளே அமெரிக்கத் திட்டத்தின் இரண்டாம் பகுதியாகும்.

நெதன்யாகு பாலத்தீனியர்களின் சுதந்திரத்திற்கு எதிரானவர் மட்டுமல்ல. ஜோர்டான் நதிக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடையே உள்ள முழுப் பகுதியும் கடவுளால் யூத மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும், அவை



அனைத்தும் இஸ்ரேலின் எல்லைக்குள் இருக்க வேண்டும் என்றும் நம்பும் மிகத் தீவிரமான யூதவாதிகளின் ஆதரவை நம்பியே அவர் பிரதமராக நீடிக்க முடியும்.

பல இஸ்ரேலியர்கள் அவர் வெளியேற வேண்டும் என்று விரும்புகிறார்கள். அக்டோபர் 7 தாக்குதல்கள் நடக்க அனுமதித்த பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை தோல்விகளுக்கு அவரைக் குற்றம் சாட்டுகின்றனர்.

பாலத்தீனிய அதிபர் அப்பாஸ் தனது 80களின் பிற்பகுதியில் இருக்கிறார். மேலும் அவர் 2005 முதல் தேர்தலைச் சந்திக்கவில்லை. வாக்காளர்களின் பார்வையில் மதிப்பிழந்தவர். பாலத்தீனிய அதிகாரம் மேற்குக் கரையில் பாதுகாப்பு விவகாரங்களில் இஸ்ரேலுடன் ஒத்துழைக்கிறது. ஆனால் ஆயுதமேந்திய யூத குடியேறிகளிடம் இருந்து அதன் சொந்த மக்களைப் பாதுகாக்க முடியவில்லை.

ஆனால், இந்தப் பயங்கரமான போரின் முடிவில் இஸ்ரேலியர்கள், பாலத்தீனியர்கள் மற்றும் அவர்களது சக்தி வாய்ந்த நட்பு நாடுகள் சமாதானம் மற்றும் அமைதியைக் கொண்டு வர முயற்சி செய்யவேண்டும். இந்தப் போர் அவர்களை அதற்கு கட்டாயப்படுத்தவில்லை என்றால், எதிர்காலம் மேன்மேலும் பல போர்கள் வெடிக்கும் அபாயம் உள்ளது.

# இஸ்ரேலை கண்டிக்கும் தகுதி யாருக்குண்டு?



**யதீந்திரா**



பாலஸ்தீனிய இஸ்லாமிய அமைப்பான ஹமாஸ் கடந்த 7ம் திகதி, இஸ்ரேலிய மக்கள் மீது, திடீர் தாக்குலை மேற்கொண்டிருந்தது. ஹமாஸ் எனப்படும் குறித்த அமைப்பானது, இஸ்ரேலை அழிப்பதை கொள்கையாகக் கொண்டிருக்கும் பலஸ்தீனிய ஆயுத அமைப்பாகும். அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவற்றால் ஹமாஸ் ஒரு பயங்கரவாத அமைப்பாக பட்டியிலடப்பட்டுள்ளது. யூதர்களின் பிரதான விடுமுறை தினத்தின் போதே ஹமாஸ் இந்தக் தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

இது ஒரு இராணுவ தாக்குதல் அல்ல. மாறாக, முற்றிலும் யூத சிவிலியன்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்ட மோசமான தாக்குலாகும். இதன் போது, 1200இற்கும் மேற்பட்ட யூதர்கள் கொல்லப்பட்டனர். சிறுவர்கள் வயதானவர்கள், பெண்கள் என பலர், பணயக் கைதிகளாக கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர். யூதக் குடியிருப்புக்குள் நுழைந்த ஹமாஸ் ஆயுததாரிகள், வீடு, வீடாக சென்று, யூதர்களை வெளியில் இழுத்து, கொலை செய்திருக்கின்றனர். பலர் அவர்களது பிள்ளைகளின் முன்னாலேயே சுடப்பட்டிருக்கின்றனர்.





இது பற்றி கருத்துக் கூறும் ஹப்று பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் உலகப் புகழ்பெற்ற வரலாற்றியலாளருமான யுவா நுவால் ஹராரி, ஹமாஸின் தாக்குதல் யூதர்களின் மீது உளவியல் யுத்தமொன்றை முன்னெடுக்கும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறுகின்றார். மிகவும் கொடுரமான இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்குதல் போன்றே, ஹமாஸின் தாக்குதல் நடவடிக்கைகளும் நன்கு திட்டமிடப்பட்டிருந்ததாக ஹாராரி கூறுகின்றார். ஹாராரி இஸ்ரேல் அரசின் அணுகுமுறைகள் தொடர்பிலும் விமர்சனங்களை முன்வைக்க தயங்காத ஒருவர். பல தலைமுறைகளுக்கு யூத - பலஸ்தீனிய மோதல்கள் தொடர வேண்டும் என்பதே, ஹமாஸ் தாக்குதலின் உள் நோக்கமென்றும் அவர் கூறுகின்றார். திட்டமிட்ட வகையில் யூத மக்கள் இலக்கு வைத்து கொல்லப்பட்டிருப்பதை நோக்கும் போது, ஹாராரியின் கணிப்பு மிகவும் சரியானது.

ஹமாஸின் தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேலிடம் அமைதியை எதிர்பார்க்க முடியுமா? நிச்சயமாக இல்லை. யூத குடியிருப்புக்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, இஸ்ரேல், யுத்தத்தை பிரகடனம் செய்தது. ஹமாஸை துடைத்தழிப்பதே இந்த யுத்தத்தின் இலக்கென்றும் இஸ்ரேலிய பிரதமர் நெத்தனியாகு சூழுரைத்தார். அப்பாவி யூத மக்கள் மீதான ஹமாஸின் தாக்குதலின் விளைவுகளை அப்பாவி பாலஸ்தீனிய மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். பலஸ்தீனியர்களின் காசா பகுதி சுடுகாடாகி வருகின்றது. வைத்திசாலை மீது விழுந்த குண்டுகளால், ஒரே நேரத்தல் 500இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. இதனை இஸ்ரேலிய படைகளே மேற்கொண்டதாக பலரும் குற்றம்சாட்டி வருகின்ற நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனோ, இதற்கும் இஸ்ரேலுக்கும் தொடர்பில்லை, இது வேறொரு தரப்பால் செய்யப்பட்டிருப்பதாக கூறியிருக்கின்றார்.

இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்தை தொடர்ந்து, நமது தமிழ் சூழலிலும் இதன் பிரதிபலிப்பை காண முடிகின்றது. காசா பகுதியிலுள்ள வைத்திசாலை தாக்கப்பட்ட சம்பவத்தை நடாளுமன்ற உறுப்பினர் ஏம்.ஏ.சுமந்திரன் கண்டித்திருக்கின்றார். இது வெறுக்கத்தக்க போர் குற்றமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். அதே போன்று இன்னும் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளும் பாலஸ்தீனயர்களுடன் ஈழத் தமிழர்கள் மனதளவில் இணைந்திருக்க வேண்டும் என்றவாறு தங்களின் கதைகளை சொல்லியிருக்கின்றனர்.

மானுடத்தின் மீதான நேயத்தினடிப்படையில் உலகில் எப்பகுதியில் மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டாலும், அதன் மீதான நமது கரிசனையை காண்பிப்பதில் தவறில்லை. நாங்களும் அவ்வாறான பாதிப்புக்களை எதிர்கொண்ட ஒரு மக்கள் கூட்டமென்னும் வகையில், காஸா பகுதியில் அகப்பட்டிருக்கும், அப்பாவி பலஸ்தீனிய மக்கள் தொடர்பில் நமது கரிசனைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று ஒருவர் கூறினால் அதில் தவறில்லை. ஆனால் அப்பாவி மக்கள் கொல்லப்படும் போது, மக்கள் மீதான கரிசனையில் பக்கச்சார்பு இருக்கக் கூடாது. எவராயினும் அவர் மக்கள்தான். இந்த அடிப்படையில் சிந்தித்தால் மட்டும்தான், நமது எண்ணத்தில் பரிசுத்தம் தெரியும். ஆனால் தமிழ் சூழலில் பாலஸ்தீனம் தொடர்பில் நீலிக்கண்ணீர் வடிக்க முற்படும் நமது தமிழ் அன்பர்கள் எவரிடமும் அந்த பரிசுத்தம் இல்லை என்பதுதான் பிரச்சினையாகும்.

பாலஸ்தீனியர்களுக்கும் நமக்குமுள்ள உறவு என்ன ? இப்படியொரு கேள்வியை கேட்டால் - அதற்கான பதில் இப்படியிருக்கும். ஒரு காலத்தில் பாலஸ்தீனம் நமது விடுதலை இயக்க போராளிகளுக்கு பயிற்சியளித்தது. எமது போராட்டத்திற்கான தார்மீக ஆதரவை அவர்கள், அன்று வழங்கியவர்கள். உண்மைதான். ஆனால் அப்போதிருந்த பாலஸ்தீனம் ஜசீர் அரபாத்தின் பாலஸ்தீனமாகும். இப்போதிருப்பது, இஸ்லாமிய சகோதரத்துவ கருத்தியலால் வழிநடத்தப்படும் ஹமாஸின் பாலஸ்தீனமாகும்.

இந்த அடிப்படையில் விவாதிப்பதாயின் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அனைவரும் இஸ்ரேலுடன்தான் நிற்க வேண்டும். ஏனெனில் அன்றைய சூழலில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இஸ்ரேலிய உளவுத்துறையான மொசாட் பயிற்சியளித்த கதை பிரபலமானது. ஆரம்பத்தில் இரகசியமாக இருந்த விடயம், பின்னர் மொசாட் அதிகாரியான விக்டர் ஒட்ரோவ்ஸ்கி, எழுதிய, மோசடி வழிகளின் ஊடாக என்னும் நூல் வெளியானதைத் தொடர்ந்து, இது வெளிச்சத்திற்கு வந்தது. அந்த நூலில் இலங்கை இராணுவத்திற்கும், சமவேளையில் பொதுவாக புலிகள் என்றழைக்கப்படும் இலங்கைத் தமிழ் ஆயுத அமைப்பிற்கும், மொசாட் பயிற்சியளித்த கதையை அவர் விபரித்திருக்கின்றார். இரண்டு தரப்புக்களும் ஒருவரையொருவர் சந்தித்துவிடக் கூடாதென்னும், தனது மேலதிகாரியின் உத்தரவிற்காக தான் எவ்வாறு அவதானத்துடன் செயற்பட வேண்டியிருந்தது, பற்றியெல்லாம், விக்டர் விபரித்திருக்கின்றார். அந்தக் காலத்தில் புலிகள் என்றழைக்கப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டும்தான். இந்த அடிப்படையில் சிந்திப்பதாயின், ஈழத் தமிழர்கள் மனதளவில் இஸ்ரேலுடனுமல்லவா நிற்க வேண்டும்.

ஆனால் பிரச்சினை வேறு. அன்றைய அரசியல் சூழலில், ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு நோக்கத்திற்காக ஈழ ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளிக்க முன்வந்திருந்தது. பின்னர், அனைவரையும் ஓரங்கட்டும் நோக்கில், அனைத்தையும் இந்தியா பொறுப்பெடுத்தது. இந்தியாவின் பயற்சி மற்றும் நிதியுதவியில்தான் சாதாரணமாக இருந்த தமிழ் ஆயுத அமைப்புக்கள் திடீரென்று வீங்கின. இலங்கை இராணுவத்திற்கு பெரும் சவாலாக மாறின. இந்த இடத்தில் ஈழத் தமிழர்கள் இந்தியாவுடன்தான் அதிகம் மனதளவில் நிற்க வேண்டும்.

ஆனால் விடயங்களை தொகுத்து நோக்கினால் அன்றைய சூழல் வேறு, இன்றைய சூழல் வேறு. ஒரு காலத்தில் ஆயுதப்பயிற்சி பெற்றோம் என்பதற்காக, ஹமாஸால் வழிநடத்தப்படும் பாலஸ்தீனத்துடன் ஈழத் தமிழர்கள் மனதளவில் நிற்க வேண்டுமென்று கூறுவது சிறுபிள்ளைத்தனம். இன்றைய சர்வதேச அரசியல் ஒழுங்கை புரிந்துகொள்ள முடியாதவர்களே, இவ்வாறு உளறிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் பாதிக்கப்படும் மக்களின் பக்கமாக எங்களுடைய கரிசனையை காண்பிக்க வேண்டுமென்று ஒருவர் கூறினால், அது சரியானது. ஆனால் அதிலும் ஒரு சிக்கலுண்டு. அப்பாவி யூத மக்கள் கொல்லப்படும் போது, அமைதியாக உறங்கிவிட்டு, பின்னர் திடிரென்று விழித்து, பாலஸ்தீனியர்களுக்காக குரல் கொடுப்பதாக கூறுவது, ஒரு மோசடியாகும்.

இரு வாரங்களுக்கு முன்னர், ஹமாஸ் அப்பாவி யூத மக்களை கொன்ற போது, அது தொடர்பில் எவரும் கண்டணங்களை வெளியிடவில்லை. ஏன்? நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏன் யூத மக்களுக்காக பேசவில்லை? இப்போது பாலஸ்தீனியர்கள் மீது திடீர் கரிசனைவரக் காரணமென்ன? ஒரு வேளை பாலஸ்தீனியர்களுக்காக குரல் கொடுத்தால், இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் சந்தோசப்படுவார்களென்று சுமந்திரன் எண்ணுகின்றாரோ!

அப்பாவி மக்களை இலக்கு வைக்கும் அணுகுமுறையை எவர் மேற்கொண்டாலும் நாம் அதனை கண்டிக்க வேண்டும். தங்களது - யூத, கிறிஸ்தவ மற்றும் அமெரிக்க எதிர்ப்பு வாதத்திற்காக, சாதாரண மக்களை இலக்கு வைக்க முடியுமென்னும் கொலை வாதமொன்றை இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்கள் கைக்கொண்டிருக்கின்றன. அதுவே அவர்களது அடிப்படையான தாக்குதல் உக்தியுமாகும்.

இந்த அடிப்படையில்தான், 2001இில், ஒஸாமா பின்லேடன் தலைமையிலான அல் ஹைடா அமைப்பு, அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது தாக்குதலை மேற்கொண்டது. இதன் போது, அண்ணளவாக 3000 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். அல் ஹைடாவின் தொடர்சிதான் ஐ.எஸ்.ஐ.எஸ். இப்போது இந்த வரிசையில் பாலஸ்தீனிய ஹமாஸ். உண்மையில் இஸ்ரேலை கண்டிப்பதை விடவும், அப்பாவி மக்களை இராணுவ இலக்காகக் கொள்ளும் ஹமாஸ் போன்ற அமைப்புக்களைத்தான் நாம் கண்டிக்க வேண்டும். ஆனால் நமது சூழலில் அதனை காணமுடியவில்லை. யூத மக்களுக்காக குரல் கொடுக்க முடியாதவர்கள் பாலஸ்தீனிய மக்களுக்காக குரல் கொடுக்கும் தகுதியற்றவர்களாவர்.

●